janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 87 | 2024 டிசம்பர் 08 - டிசம்பர் 14 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 36




## கட்சி நூற்றாண்டை உற்சாகத்தோடு கொண்டாடுவோம்!

# அதானியின் அட்டூழியத்தையும், துணைபோகும் அரசையும் கண்டித்து டிசம்பர் 10ல் ஆர்ப்பாட்டம்

## ◆ 2025 செப். 21 - 25 தேதிகளில் பஞ்சாப், சண்டிகரில் 25வது கட்சிப் பேராயம் ◆ தேசியக் குழு கூட்ட முடிவுகள்!

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக்குழுக் கூட்டம், கட்சி தலைமையகமான அஜய் பவனில் தேசிய நிர்வாக குழு உறுப்பினர் பிரகாஷ் பாபு தலைமையில், நவம்பர் 28,29, 30 தேதிகளில் நடைபெற்றது.**

கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா, அரசியல், பொருளாதாரம், மற்றும் கட்சி காங்கிரஸிற்கான வழிகாட்டு நெறிமுறைகள் ஆகியவை பற்றிய அறிக்கையை முன்மொழிந்து பேசினார்.

அதன் மீது விரிவான விவாதம் நடைபெற்றது. பாஜகவின் தவறான ஆட்சி முறை, கொள்கைகளின் காரணமாக உத்தரப் பிரதேசத்தின் சம்பல் பகுதியிலும், நாடு முழுவதிலும் நடைபெறும் வகுப்புவாத வன்முறைகள் குறித்தும், அதற்கு எதிராக முற்போக்கு சக்திகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டிய அவசியம் குறித்தும் விவாதத்தில் தமது கருத்துக்களை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

### சண்டிகரில் கட்சிப் பேராயம்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது கட்சிப் பேராயத்தை (அகில இந்திய மாநாடு) பஞ்சாப் மாநிலம், சண்டிகரில், 2025 செப்டம்பர் 21 முதல் 25 தேதி வரை நடத்துவது என தேசிய குழு ஒருமனதாக முடிவு செய்தது.






தேசிய, மாநில மாநாடுகளுக்கு பிரதி நிதிகள் தேர்வு செய்யப்படுதல், குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை, உள்ளிட்ட வழிகாட்டும் நெறிமுறைகளை தேசியக் குழு தீர்மானித்தது. 2025 ஆகஸ்ட் மாதத்துக்கு முன்னதாக மாநில மாநாடுகளையும், அதற்கு முன்னதாக மாவட்ட, இடைக்குழு, கிளை மாநாடுகளையும் நடத்த முடிவு செய்யப்பட்டது.

### தீர்மானங்கள்:

### டெல்லி கட்டுமானத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்கு,!

தில்லியில் மாசுபாட்டைக் கட்டுப்படுத்த, நகரின் அனைத்து கட்டுமானப் பணிகளும் தடை செய்யப்பட்டுள்ளன. இதனால் கட்டுமானத் தொழிலாளர்கள் வேலையும், ஊதியமும் இழக்கிறார்கள். எனவே, இப்பணியாளர்களுக்கு போதிய நிவாரண நிதி வழங்க வேண்டும் என கோருகிறோம்.

### மணிப்பூர் மாநில அரசே, பதவி விலகு!

மணிப்பூரில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது, மேலும் 60,000க்கும் மேற்பட்டோர் அகதிகள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டது. ஓராண்டு கடந்தும் அங்கு நிகழும் வன்முறைகளை கட்டுப்படுத்த இயலவில்லை. இவை மாநில அரசின் தோல்வியைத் தெளிவாகக் காட்டுகின்றன. எனவே மணிப்பூர் மாநில அரசு பதவி விலக வேண்டும் என இந்திய கம்யூனிஸ்டு கட்சி வலியுறுத்துகிறது.

### நூறு நாள் வேலைத் திட்டத்தை முறையாகச் செயல்படுத்து!

மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலை உறுதி திட்டத்தில் குறைபாடுகள் உள்ளதாகக் கூறி, ஏராளமான தொழிலாளர்களின் பெயர்கள் தகுதிப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. ஆதார் அட்டை விபரங்களோடு பொருந்தவில்லை என்று கூறி வேலையும் ஊதியமும் மறுக்கப்படுகிறது. இத்திட்டத்தை ஒழுங்குபடுத்துவது எனும் பெயரில் ஒழிப்பதற்கு அரசு முயல்கிறது. இந்தப் போக்கைக் கண்டிப்பதோடு, தொழிலாளிக்கு ஆண்டுக்கு 200 நாட்கள் வேலையும், நாளொன்றுக்கு ரூ. 700 ஊதியமும் வழங்க வேண்டும்,.

### வங்கதேசத்தில் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகள்:

வங்கதேசத்தில் இந்து மற்றும் பிற சிறுபான்மை சமூகங்களை குறிவைத்து நடத்தப்பட்ட சமீபத்திய வகுப்புவாத வன்முறை சம்பவங்கள் குறித்து இந்திய கம்யூனிஸ்டு கட்சி தனது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்துகிறது. இந்த வெறுப்பு மண்டிய ஆக்கிரமிப்புச் செயல்களால், மதச்சார்பின்மை, சமத்துவம், நீதி நெறிமுறைகளைக் குழி தோண்டிப் புதைப்பது மட்டுமின்றி, மத நல்லிணக்கமும் பன்முகத்தன்மையும் வாய்ந்த வங்கதேச சமூகத்துக்கு கடுமையான அச்சுறுத்தலாகவும் அமைகின்றன.

வங்கதேசத்தின் ஆளும் கட்சியோ அல்லது வகுப்புவாத தமது சுயலாபத்துக்காக, இந்த அமைதிச் சீர்குலைவை பயன்படுத்திக் கொள்ள முயற்சிப்பதை, உள்நாட்டில் உள்ள அனைத்து முற்போக்கு, மதச்சார்பற்ற சக்திகள் இணைந்து நின்று முறியடிக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தேசியக் குழு கூட்டம் கேட்டுக்கொண்டது.

### கட்சியின் நூற்றாண்டு விழா:

நூற்றாண்டு விழாவை கொண்டாடுவது பற்றி ஒவ்வொரு மாநிலமும் ஏராளமாக திட்டமிட்டுள்ளன. தமிழ்நாட்டில் கொண்டாடுவதற்காக திட்டங்கள் பற்றி மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் ஜனசக்தியில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதி வருகிறார்.

### துவக்க நாளில் கான்பூரில் பேரணி:

நூற்றாண்டு துவங்கும் 2024டிசம்பர் 26 அன்று கட்சியின் அமைப்பு நிலை மாநாடு நடந்த உத்திரப் பிரதேசத்தின் கான்பூரில் பொதுக்கூட்டமும் பேரணியும் நடைபெறும்

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

### டிச. 10 கண்டன ஆர்ப்பாட்டம்

சலுகை சார்ந்த முதலாளித்துவத்தை ஊக்குவிப்பதில் ஒன்றிய அரசின் பங்கை அம்பலப்படுத்துவதற்கும், அதானி குழும நிறுவனங்களின் முறைகேடுகளை விசாரிக்க நாடாளுமன்ற கூட்டுக் குழுவை நியமிக்க வலியுறுத்தியும் டிசம்பர் 10ஆம் தேதி நாடெங்கும் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்த தேசியக் குழு கூட்டம் முடிவு செய்தது. மேலும் மணிப்பூர் நிலவரம் குறித்து நாடாளுமன்றத்தில் விரிவான விவாதம் நடத்தப்பட வேண்டும், ஆயுதப்படை சிறப்புப் பாதுகாப்புச் சட்டத்தை (AFSPA) திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்தியும், விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், சமத்துவமின்மை, உள்நாட்டு உற்பத்தியின் வீழ்ச்சி விகிதம் சரிவடைந்து வருதல் உள்ளிட்ட கடுமையான பொருளாதாரப் பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தியும், பா.ஜ.க.வின் தவறான ஆட்சி மற்றும் பொருளாதாரச் சீர்கேட்டைப் பற்றி மக்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் போராட்டத்தை விரிவாக நடத்துமாறு கட்சிக் கிளைகளுக்கு தேசிய குழுக்கூட்டம் அறைகூவல் விடுத்தது.

ஒரு பெருஞ்செயல் செய்வாய் வா! வா! வா! – கட்சிக்கடிதம் | ப 02



ரூபாய் மதிப்பு வீழ்ச்சி: ஏற்படுத்தும் பாதிப்புகள் – டி.எம்.மூர்த்தி | ப 8–9



டங்ஸ்டன் சுரங்கம்: பல்லுயிர் வளம் அழிக்கப்படுமா? – வ.மணிமாறன் | ப 16






# ஒரு பெருஞ்செயல் செய்வாய் வா! வா! வா!

போர்க்குணமிக்க தோழர்களே!

**அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாநில மாநாடு ஔவைக்கு நெல்லிக்கனி அளித்த அதியமான் ஆட்சி புரிந்த, புகழுக்குரிய மண்ணான தர்மபுரியில் நடைபெற உள்ளது.**

ஆம்! ஜனவரி திங்கள் 26 ஆம் நாள் நமது எதிர்காலச் சிற்பிகள் லட்சக்கணக்கில் அணி திரள உள்ளார்கள்.

ஜனவரி 26 என்பது நமது நாட்டின் வரலாற்றுச் சிறப்புக்குரிய நாள்.

1950 ஜனவரி 26 இல் நமது நாடு குடியரசு நாளாகப் பிரகடனம் செய்யப்பட்டது.

அன்று முதல் ஆண்டுதோறும் ஜனவரி 26 ஆம் நாளில், நமது நாட்டின் மணிக்கொடியாம் அசோகச் சக்கரம் மையத்தில் கொண்ட மூவர்ணக் கொடியை நட்ட நெடுமரத்தில் ஏற்றி வைத்து, நமது வணக்கத்தைத் தெரிவித்து, மரியாதை செய்வதுடன், அரசியலமைப்புச் சட்டம் குறித்து எடுத்துக் கூறி உறுதி ஏற்கிறோம்.

நமது அரசியலமைப்புச் சட்டம் என்பது சாதாரணமான ஒன்று அல்ல, விடுதலைப் போர்க்களத்தில் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட தியாக சீலர்கள் 389 பேரால் உருவாக்கப்பட்டது.

அதிலிருந்து வரைவு அறிக்கை தயார் செய்திட அண்ணல் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழு இரண்டு ஆண்டுகள், 11 மாதங்கள், 18 நாட்கள் விவாதித்து வரைவு அறிக்கை தயாரித்தது.

இவ்வறிக்கை அரசியல் நிர்ணய சபை முன் வைக்கப்பட்டு, அதன் மீது வரிவரியாக விவாதிக்கப்பட்டது.

புள்ளி, கமா உட்பட விவாதிக்கப்பட்டன எனில், விவாதம் எவ்வளவு உயர்ந்த ஜனநாயகத்தன்மையில் அமைந்திருந்தது என்பதனை நாம் புரிந்துகொள்ள முடியும்.

மற்றும் உறுப்பினர்கள் அனைத்து வினாவிற்கும், ஐயப்பாடுகள் ஒவ்வொன்றிற்கும், பொறுமையாக, நிதானமாக அய்யமற விளக்கமளித்தார் நிறைகுடமான அண்ணல் அம்பேத்கர்.

அவர் அளித்திட்ட விளக்கங்களுக்குப் பின்னர், அரசியல் நிர்ணய சபை, அரசியலமைப்பை ஒருமனதாக 1949 நவம்பர் 26 இல் ஏற்றுக் கொண்டது.

அந்நாள் முதல் ஆண்டுதோறும் அரசியலமைப்பு நிர்ணய சபையின் ஏற்றுக்கொண்ட நாளான நவம்பர் 26 ம் தேதியை அரசியல் சாசன நாளாக நாடு கொண்டாடி வருகிறது. அதன் தொடர்ச்சியாகத்தான் இவ்வாண்டு நவம்பர் 26 ஐ, 75ஆம் ஆண்டாக, பவள விழாவாக நாடு கொண்டாடி மகிழ்ந்தது. மகிழ்ந்தோம் என்பதோடு மட்டுமல்ல, அன்றைய நாளில் உறுதிமொழியை ஏற்றோம்.

அரசியலமைப்புச் சட்டம் என்பது நமது நாட்டை வழிநடத்தும் வழிகாட்டியாகும்.

ஒன்றிய அரசாக இருந்தாலும், மாநில அரசாக இருந்தாலும், யூனியன் பிரதேசங்களாக இருந்தாலும் அவை அனைத்தும் அரசியல் சட்டத்திற்கு உட்பட்டே செயல்பட வேண்டும்.

அரசியல் அமைப்புச் சட்டத்தை தான் வெகுவாக மதிப்பதாக, நாட்டோர் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக, அரசியல் சட்டப் புத்தகத்தை நாட்டின் பிரதமர் தொட்டு வணங்கியதை அனைத்துத் தொலைக்காட்சி நிறுவனங்களும் வெளியிட்டதைப் பார்த்திருப்பீர்கள்.

அனைத்து நாளேடுகளும் முதல் பக்கச் செய்தியாகப் படத்துடன் வெளியிட்டதைப் பார்த்தும், படித்தும் இருப்பீர்கள்.




அரசியலமைப்புச் சட்டத்தை இன்றைய ஒன்றிய அரசு உண்மையில் ஏற்றுக் கொண்டதா? அதனை மதிக்கின்றதா? எனில் அது கேள்விக்குறியே!

அண்ணல் அம்பேத்கர் உருவாக்கி நமது நாட்டிற்கு அளித்திட்ட மிகப்பெரும் முற்போக்குக் கொடைதான் அரசமைப்புச் சட்டம்.

அச்சட்டம் நமது நாட்டில் வாழும் குடிமக்கள் அனைவரும் சுயமாகச் சிந்திக்க, தான் சிந்தித்ததை வெளிப்படுத்தும் விதமாகப் பேசவும், ஏடுகளில் எழுதவும், நூல்களாக அச்சிட்டு வெளியிடவும் நமக்கு அளித்துள்ள மிகப்பெரும் உரிமையாகும்.

அத்தகைய உரிமையை இன்று நாம் பயன்படுத்த முடிகின்றதா? பயன்படுத்திய கோவிந்த் பன்சாரே, கல்புர்க்கி, நரேந்திர தபோல்கர், பெண் பத்திரிகையாளர் கௌரி லங்கேஷ் ஆகிய நால்வரின் கதி என்னவாயிற்று?

வெள்ளையர்கள் ஆட்சிக் காலத்தில் மாற்றுக் கருத்துடையவரைக் கைது செய்தனர். ஆண்டுக் கணக்கில் சிறை வைத்தனர். ஆனால், இன்றைய ஆட்சியாளர்கள் உயிரையே அல்லவா பறித்துக் கொள்கிறார்கள்.

மாற்றுக் கருத்துடையோரை நகர்ப்புற நக்சலைட்டுகள் எனத் தங்களின் புதிய கண்டுபிடிப்புகள் மூலம் தேசத்துரோகக் குற்றம்சாட்டி, ஆண்டுக்கணக்கில் சிறையில் அடைத்து, அவர்கள் ஜாமீனில் கூட வெளிவர முடியாதபடிச் செய்து, உயிருடன் சென்றவர்களைப் பிணமாகத்தான் வெளியே அனுப்புகிறார்கள்.

அரசியலமைப்புச் சட்டத்தால் உருவாக்கப்பட்ட அமைப்புகள் தங்களின் சுதந்திரமான செயல்பாட்டை இழந்து, பாஜகவின் கட்டளைகளை நிறைவேற்றக்கூடிய அமைப்புகளாக, அடிமை அமைப்புகளாக மாறிவிட்ட பெரும் கொடுமை நீடிக்கலாமா?

ஆட்சி என்பது எந்த ஒரு மதத்தையும் அல்ல, மதச்சார்பின்மை என்கிற கொள்கையைப் பின்பற்றிட வேண்டும் என்னும் உயரிய கொள்கைக்கு மாறாக, மதம் சார்ந்த நாடாகச் செயல்படுவதும். நாட்டு மக்களிடையே மதவெறிகளை ஊட்டி, மக்களைப் பிளவுபடுத்தித் தங்களின் மிகக் குறுகிய அரசியல் நோக்கத்தை நிறைவேற்றிக்

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

## உறுதி கொண்ட நெஞ்சினாய் வா! வா!! வா!

அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாநில மாநாடு தர்மபுரியில் வரும் ஜனவரி 26, 27, 28 ஆகிய மூன்று தினங்களில் மிகுந்த ஒழுங்குமிக்க மாநாடாக, இதற்கு முன்னர் நடைபெற்ற மாநாடுகளைக் காட்டிலும், அதை நிகழ்த்திய சாதனைகளை மிஞ்சும் மாநாடாக நடைபெற உள்ளது.

மாநாட்டின் தொடக்க நாள், ஆம்! ஜனவரி 26 ஆம் நாள். நாட்டின் குடியரசு நாளில் லட்சோப லட்சக்கணக்கான இளைஞர்களின் பெரும்படை, போர்ப்படை நமது நாட்டை மாற்றி அமைக்கும் கொள்கை வீரர்களாக. இளைஞர்களின் பட்டாளம் பெரும்படையெனத் திரண்டு அணிவகுக்க உள்ளது.

நாட்டில் தமிழகம் கல்வியில் உயர்ந்துள்ளது என்பது உண்மைதான். மறுப்பதற்கு இல்லை. ஆனால் எல்லோருக்குமான கல்வி தனியார் வசம் அகப்பட்டு விழி பிதுங்கி நிற்கின்றது.

அனைவருக்கும் கல்வி, அவரவர் விரும்பும் கல்வி வேண்டும். கல்வி என்பது கட்டணமில்லாக் கல்வியாக இருக்க வேண்டும்.

கல்வி இருக்கின்றது. அது எட்டாக் கனியாக இருக்கின்றது என்ற நிலை அடியோடு மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

அனைவருக்கும் கட்டணம் இல்லாக் கல்வி என்கிற முழக்கத்தை முன்வைத்து,

கடன் பெற்று, இருக்கும் சொற்பப் பொருள்களையும் விற்று, தங்கள் பிள்ளைகளை உயர்கல்வி வரை படிக்க வைத்து அழகு பார்த்த பெற்றோருக்கு, பிள்ளைகள் தருவது, தங்களுக்குப் பல்கலைக்கழகங்கள் வழங்கிய பட்டம் என்கின்ற காகிதத்தைத் தவிர வேறொன்றும் இல்லை. வேலையின்மை என்கின்ற பெருங்கொடுமை நாடு முழுதும் நீக்கமற நிரம்பி உள்ளது.

பிள்ளை படித்து, பட்டம் பெற்று, உயர் பதவிக்குச் சென்று கை நிரம்ப ஊதியம் பெற்று, வயதான தங்களுக்கு வாழ்வளிப்பார்கள் என்பது வெறும் ஏமாற்றத்தை அளித்தது.

அனைவருக்கும் வேலை என்கிற முழக்கத்தை முன்வைத்து, இளைஞர் படையின் எழுச்சி மிக்கப் பேரணி நடைபெற உள்ளது.

அனைவருக்கும் கட்டணம் இல்லாக் கல்வி, அனைவருக்கும் வேலை என்கின்ற இம்முழக்கம் அனைவருக்கும் பொதுவானது.

மன்றத்தில் உள்ளோர், இல்லாதோர் என்கிற வேறுபாடு இன்றி, அனைவருக்கும் பொதுவானது இம்முழக்கம். தமிழ்நாடு எங்கும், பட்டி தொட்டி எங்கும் எதிரொலிக்கும் பெரும் முழக்கமாகும்.

குமரி முதல் திருவள்ளூர் வரை, நீலகிரி முதல் கிருஷ்ணகிரி வரை அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த இளைஞர்கள், விண்ணதிர வீர முழக்கமிட்டு, வீரநடை போட்டு அணிவகுக்க ஆயத்தமாகி வருகின்ற செய்திகள் வந்த வண்ணம் உள்ளன.

முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் தோழர் ந.நஞ்சப்பன் பி.ஏ அவர்களை தலைவராகவும், தர்மபுரி மாவட்டச் செயலாளர் தோழர் எஸ்.கலைச்செல்வன், பி.எஸ்.சி, பி.எல் அவர்களை செயலாளராகவும், மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் தோழர் எஸ். தேவராஜ் அவர்களைப் பொருளாளராகவும் கொண்ட விரிவான வரவேற்புக் குழு மாநாட்டுப் பணிகள் அனைத்தையும் துரிதமாக மேற்கொண்டு செயல்படுத்தி வருகின்றது.

**ஒளி படைத்த கண்ணினாய் வா! வா! வா! உறுதி கொண்ட நெஞ்சினாய் வா! வா!! வா!**





த.லெனின்

# இந்துத்துவ அரச பயங்கரவாதத்தின் இன்னும் ஒரு தாக்குதல்! சம்பல் கலவரம்!



**உத்தரப்பிரதேச மாநிலத்தின் சம்பல் பகுதியில் ஷாஹி ஜமா பள்ளிவாசல் அமைந்துள்ளது. மொகலாயர்களின் ஆட்சிக்காலத்தில் இந்துக் கோவிலை இடித்து இந்த மசூதியைக் கட்டியிருப்பதாக இந்துத்துவ ஆர்.எஸ்.எஸ் கும்பலால் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. அந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், பள்ளிவாசலை ஆய்வு செய்யக் குழு அமைத்து உத்தரவிட்டது.**

இதுகுறித்து ஆய்வு மேற்கொள்ள மாவட்ட நீதிமன்றத்தில் அனுமதி பெறப்பட்ட நிலையில் கடந்த நவம்பர் 24 அன்று மசூதியில் இரண்டாம் கட்ட ஆய்வுப் பணிகளின் போது, அப்பகுதியில் வன்முறை ஏற்பட்டது. அப்போது வெடித்த கலவரத்தில் 5 பேர் வரை உயிரிழந்தனர். கலவரத்திற்குக் காரணமான மாவட்ட நீதிமன்றத்தின் ஆய்வு உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம், கீழமை நீதிமன்றத்தின் விசாரணைக்கு அதிரடித் தடையையும் பிறப்பித்திருக்கிறது.

### குறிவைக்கப்படும் இஸ்லாமிய வழிபாட்டுத் தலங்கள்!

இஸ்லாமிய வழிபாட்டுத் தலங்கள் இருக்கும் பகுதிகளைக் குறிவைத்து, இந்துத்துவா கும்பல்கள் வன்முறைச் செயல்களைத் திட்டமிட்டுச் செய்து வருகின்றன. பாபர் மசூதி தொடங்கி, ஞானவாபி மசூதி, வாரணாசி, மதுரா எனப் பல முக்கிய இஸ்லாமியத் தலங்கள், இந்துக் கோயில்களை இடித்துவிட்டுக் கட்டியதாகப் பிரச்சனைகள் எழுப்பப்பட்டு, பின்னர் அந்த மசூதிகளை ஆய்வு நடத்த வேண்டும் என்று நீதிமன்றத்தை நாடுகின்றனர்.

அதன் பின்னர் மசூதி இருக்கும் இடம், இந்து மத வழிப்பாட்டுத் தலம் இருந்த இடம்தான் என்று அதைத் தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று பஞ்சாயத்துச் செய்கின்றனர். இதுதான் அவர்களது வாடிக்கையான கலவர அரசியலாகும். இந்துக் கோவில்களை அழித்துவிட்டு மசூதி கட்டப்பட்டதாக இவர்கள் சொன்னால் அதற்கு முன்பு அங்கு பௌத்த, ஜெயின மத வழிபாட்டுத் தலங்களை அல்லது பழங்குடியின வழிபாட்டுத் தலங்களை இடித்து விட்டுதான் அவையும் கட்டப்பட்டிருக்க வேண்டும். எனவே, இப்படியே தேடினால் நாட்டில் நல்லிணக்கம் நிலவாது மாறாக கலவரங்களே எழும்!

### ஆய்வுக்கு ஏன் இந்த அவசரம்?

40 க்கும் மேற்பட்ட இந்திய ராணுவ வீரர்களைக் கொன்ற புல்வாமா தாக்குதலில் 400 கிலோ தடை செய்யப்பட்ட ஆர்.டி.எக்ஸ் வெடிமருந்து பயன்படுத்தப்பட்டதாகச் சொல்லப்பட்டது. ராணுவம் பயன்படுத்தும் இதுபோன்ற வெடி மருந்துகள் எப்படி அங்கு வந்தது? என்பதை இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால், 500 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பள்ளிவாசல் அடியில் கோவில் இருந்ததா? என்று கண்டுபிடிக்கும் ஆய்வு மேற்கொள்ளப்படுவதில் இருந்தே நாட்டின் நல்லிணக்கத்தை கெடுக்கும் மதவெறிப்பித்து எப்படி எல்லாம் அமைதியைக் குலைக்கிறது, கலவரங்களை கட்டமைக்கிறது என்பதை இது காட்டுகிறது. இடிபாடுகளுடன், நசிந்த நிலையில் எத்தனையோ கோவில்கள் இருக்கும் போது அதனை மறுநிர்மானம் செய்யவோ, புதுப்பிக்கவோ எந்த முயற்சிகளையும் எடுக்காத இவர்கள் இந்துமதக் காப்பாளர்களாக அவதாரம் எடுக்கின்றனர்.

அனைவருக்கும் வேலை, மருத்துவ வசதிகளை ஏற்படுத்துவது, வறுமையைப் போக்கி வாழ்க்கை தரத்தை உயர்த்துவது என்பதில் எல்லாம் கவனம் செலுத்தாமல் கார்ப்பரேட்டுகளின் நலனுக்காக மட்டும் வரிந்து கட்டி சேவகம் செய்கின்றனர். அதை மூ(மோ)டி மறைத்து, மடைமாற்றம் செய்யத்தான் இது போன்ற கலவரங்கள்!

சம்பலில் உள்ள ஜமா 1920 ஆம் ஆண்டு தொல்லியல் துறையால் எடுக்கப்பட்டு ஒரு மசூதியாகவே இன்று வரை பராமரிக்கப்பட்டு வருகிறது. அது பாபரால் கட்டப்பட்டதா அல்லது அதற்கு முன்பு கட்டப்பட்டதா? என்பதையெல்லாம் ஆராயாமல் இவ்விடத்திலிருந்து 25 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கைலாய கோவில் பூசாரி ரிஷி மகராஜ் இந்த மசூதிக்கு முன்பு ஹரிஹரன் கோவில் இருந்தது என்று அடித்துச் சொல்லி அதை ஆய்வு செய்ய வேண்டும் என்று மனு கொடுத்து கலவரத்துக்கு வித்திட்டார்.

### ஏற்கனவே கொடுக்கப்பட்ட மனுவிற்கு ஏன் நடவடிக்கை இல்லை?

கலவரம் நடத்துவதிலேயே முனைவர் பட்ட ஆய்வு மேற்கொண்டு வரும் உத்தரப்பிரதேச முதல்வரும்,மாவட்ட நிர்வாகமும் இது சம்பந்தமாக இஸ்லாமியத் தரப்பு பெரியவர்களை அழைத்து பேசிப் பிரச்சினையைத் தீர்க்க எந்தநடவடிக்கையும் மேற்கொள்ளாது அதிரடியாக புல்டோசர் ராஜ் காட்டாட்சி முறைப்படி ஆய்வு செய்ய முற்பட்ட போதுதான் இந்தக் கலவரம் வெடித்துள்ளது.

என்ன வேடிக்கை என்றால் ஏற்கனவே அந்த மசூதியை வணிகத்தளமாக மாற்றி அடித்தளத்தைப் பிரித்து வாடகைக்கு விடப்பட்டது என்ற குற்றச்சாட்டு 1998 ஆம் ஆண்டு காவல்துறையில் புகாராக அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக்கு அவசரம் காட்டும் காவல்துறை அந்த நவம்பர் 24 அன்று மசூதியில் இரண்டாம் கட்ட ஆய்வுப் பணிகளின் போது, அப்பகுதியில் வன்முறை ஏற்பட்டது. முன்பு கொடுக்கப்பட்ட அந்த மனு குறித்து ஏன் இன்று வரை மௌனம் காக்கிறது?

ஆய்வு செய்ய கீழமை நீதிமன்றம் உத்தரவிட்டவுடனே மேல்முறையீடு செய்ய வாய்ப்பு கொடுக்காமல் அதிரடி ஆய்வு ஏன்? கலவரம் செய்வதன்றி வேறு என்ன நோக்கம்?

இந்த கலவரத்தில் அப்பாவி

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

## கண்ணீர் விட்டு அழுத துஷ்யந்த் தவே!



மூத்த பத்திரிகையாளர் கரண் தாப்பர் திவயர் யூ டியூப் நேர்காணலில் உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் பார் கவுன்சில் தலைவர் துஷ்யந்த் தாவே உடன் உரையாடிய காட்சி இப்போது பெரும் பேசு பொருளாகி உள்ளது. முன்னாள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் அரசமைப்புச் சட்டத்திற்குப் புறம்பாக 1991 வது ஆண்டு நிறைவேற்றப்பட்ட வழிபாட்டுத் தலங்கள் சிறப்புச் சட்டத்தில் அவர் அளித்த தீர்ப்புரையால்தான் இந்தக் கலவரங்கள் நடைபெற்று வருகின்றன. நாட்டில் வறுமையை ஒழிக்க எந்த நடவடிக்கையும் இல்லை. ஆனால், நல்லிணக்கத்தைக் கெடுக்க கலவரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்று கூறியவர் மனம் வெதும்பிக் கண்ணீர் விட்டு அழுதே விட்டார்.

அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

கொடுமை பொறுக்க முடியாமல் மக்கள் சிந்தும் கண்ணீர் ஆட்சியை அழிக்கும் படைக்கருவியாகும் என்ற திருவள்ளுவரின் கருத்து நிச்சயம் பொய்க்காது நடந்தே தீரும்!

அத்துடன் மதச்சார்பின்மை என்கிற மகத்தான கோட்பாட்டை கம்யூனிஸ்டுகள், இடதுசாரிகள், ஜனநாயக, முற்போக்குச் சக்திகள் மட்டுமல்லாது இதுபோன்ற அறிவு உலகச் சிந்தனையாளர்களும் அதற்காக வலுவாகக் குரல் கொடுக்கிறார்கள் என்பதை பலமாக வெளிப்படுத்தும் சம்பவமாக இது அமைந்துள்ளது.

## பாபர் மசூதி தீர்ப்பு, நேர்மையற்ற தீர்ப்பு!



சந்திரசூட் தன்னுடைய தொழிலில் முன்னேறுவதற்கான வெறிகொண்டவர். தலைமை நீதிபதி ஆகும் வாய்ப்பைக் கெடுக்கும் எந்த விஷயத்தையும் செய்யாதவர். தன் வளர்ச்சிக்குப் பயன்படும் எனில் நேர்மையற்ற தீர்ப்புகளை வழங்க எந்தத் தயக்கமும் கொண்டிராதவர். பாபர் மசூதி வழக்கில் அவர் கொடுத்த தீர்ப்பு, நேர்மையற்ற தீர்ப்புகளுக்கான ஓர் உதாரணம்.

முன்னாள் நீதிபதி
**மார்க்கண்டேய கட்ஜு**

## வினாடி - வினா

1 "பாலொடு வந்து கூழொடு பெயரும், ஆடுடை இடை மகன்" எனப் பண்டமாற்று முறை குறித்துக்கூறும் சங்கப் பாடல் எதில் இடம்பெற்றுள்ளது?

2 பண்டைத்தமிழர் திருமண முறை குறித்த அகநானூற்றுப் பாடலைப் பாடியவர் யார்?

3 சைவ சமய அடியார்கள் (சிவனடியார்கள்) எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

4 வைணவ சமய அடியார்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

5 திருக்குறள் எந்தப் பா வகையைச் சேர்ந்தது?

6 இரட்டை அறநூல்கள் எவை?




விடைகள் 12 ஆம் பக்கம்

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 87 இதழ் 36

# துணிந்து நில் மகளே, இசைவாணி!

சபரிமலை கோவிலுக்குள் பெண்கள் நுழையக்கூடாது என்று தடுப்பது அரசியல் சாசனத்துக்கு விரோதமானது என்று 2018 செப்டம்பர் 28 ஆம் தேதி உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

கேரளத்தின் இடதுசாரி அரசு தீர்ப்பைச் செயல்படுத்த முனைந்தாலும், இந்துத்துவ மதவெறி சக்திகள், அதனை செய்யவிடவில்லை. உள்துறை அமைச்சர் அமித் ஷாவே தீர்ப்பை எதிர்த்தார்.

அப்போது, எழுதப்பட்ட கானா பாட்டுதான், "ஐயம் சாரி ஐயப்பா, நான் உள்ள வந்தா என்னப்பா". உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புப்படி உள்ளே வரவிடாமல் தடுக்கிறார்களே, ஐயப்பா நீயே கேள்! என்பதுதான் இதன் பொருள்.

அந்தப் பாடல் முழுவதிலும் இந்து மதம் பற்றியோ, கடவுள் பற்றியோ எதிர்மறையாக ஒரு சொல் கூட இல்லை. பாடல் முழுக்கப் பெண் விடுதலைதான் வலியுறுத்தப்படுகிறது.

ஆர்.எஸ்.எஸ் பினாமிகள் பல்வேறு காவல் நிலையங்களில் புகார் கொடுக்கின்றன.

"இந்து தெய்வங்களைக் குறிவைத்து கேவலமாகப் பாடல் எழுதப்பட்டுள்ளது சபரிமலை ஐயப்பன் மீது தரக்குறைவான பாடல், மிக மன வருத்தத்தில் உள்ளோம்" என்கிறது மதுரை ஜெய்ஹிந்த்புரத்தில் தாக்கல் செய்யப்பட்ட புகார்.

"ஐயப்பன் ஒரு பிரம்மச்சாரி தெய்வம். பிரம்மச்சரியம் என்பது சுயக்கட்டுப்பாடு, மனித உடலின் பாலியல் பாகங்கள் மீதான கட்டுப்பாடு அல்லது எண்ணம், சொல் மற்றும் செயல் ஆகியவற்றில் காமத்திலிருந்து விடுபடுவது. கோவிலுக்குள் மாதவிடாய் நின்று போகாத பெண்கள் நுழைந்தால் ஐயப்பனின் பிரம்மச்சரியம் கெட்டுவிடும்" என்று இவர்கள் பேசுவதுதான் ஐயப்ப சுவாமியை உண்மையில் கேவலப்படுத்துவதாகும்.

அனைத்து உயிர்களின் மீதும் அன்பு செலுத்தி அருள் பாலிக்கும் கடவுள் மீது, எவ்வளவு இழிவான கருத்தை இவர்கள் கொண்டிருக்கிறார்கள்!

பாட்டு வந்து ஆறு ஆண்டுகள் ஓடிவிட்ட பின்பு, தற்போது, ஆர்எஸ்எஸ் கம்பு சுழற்றுவதன் காரணம் என்ன?

புகாரே விடை அளிக்கிறது. நடிகை கஸ்தூரியைக் கைது செய்தது போல, இந்தப் பாடலைப் பாடிய இசைவாணி மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிறது அந்தப் புகார்.

"புகார் செய்த பின்பும் அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. சர்ச்சைக்குரிய கருத்தைத் தெரிவிக்கும் அனைவர் மீதும் ஒரே மாதிரி நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லவா? முதல்வர் என்ன செய்கிறார்? இது ஒரு இந்து விரோத அரசு" என்று பரப்புரை செய்வதுதான் சங்கிகளின் ஒரே நோக்கம்.

அரசு முடிவு எடுத்து நடிகை கஸ்தூரியை கைது செய்யவில்லை. அழைப்பு அனுப்பியும், ஆஜராகாததால், நீதிமன்றம்தான் கைது செய்யுமாறு உத்தரவிட்டது. நீதிமன்றத்தில் அவர் பிணை கேட்டபோது, எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டிய அரசு வழக்கறிஞர், பிணையில் விடுவிக்கப்படவே உதவி செய்தார்.

இசைவாணியை ஏன் கைது செய்ய வேண்டும்? கோவிலுக்குள் போக வேண்டும் என்று பாடலில் பெண் கேட்கிறார். அதுதான் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு. அதனை செயல்படுத்துமாறு கோருவதை எப்படிச் சட்டவிரோதம் என்று சொல்ல முடியும்?

இசைவாணி கிறித்தவர். அவர் எப்படி இந்து மதம் பற்றிப் பேசலாம் என்கிறார்கள். அவர் இந்து மத தெய்வங்களை வணங்கும் பாடல்களையும் பாடி இருக்கிறார். கிறிஸ்தவரான ஏசுதாஸின் ஹரிவராசனம் பாடலோடுதான் ஐயப்ப சாமி கோவிலின் நடையே திறக்கிறது.

எனவே மதம் அல்ல காரணம். இசைவாணி ஒரு பெண், அதிலும் தலித். இங்குதான் இந்த ஆணவக் கொலைகாரர்களுக்கு இடிக்கிறது. பிறப்பினால் சாதியாக்கி இழிவு படுத்துவது மட்டுமல்ல; பெண்ணாகப் பிறப்பதே இழிவுதான் என்ற இவர்களது வர்ணாசிரம மனு (அ)தர்மச் சிந்தனைதான் இந்த எதிர்ப்பின் அச்சு. அதோடு அரசியல் உள்நோக்கத்தோடு திமுக அரசை அசைத்துப் பார்க்கும் நரித் தந்திரம்.

கிரேசி மோகன், கமலஹாசன் திரைப்படங்களில் இந்து தெய்வங்களை நக்கல் அடித்த போது, இவர்கள் புண்படவில்லை. காரணம் ஊரறிந்தது

பாடகி இசைவாணியை அலைபேசியில் அழைத்து எண்ணிறந்த ஆபாச வசவுகள், அச்சுறுத்தல்கள் தொடர்கின்றன.

அதே பாடலைப் பாடி காணொலி வெளியிட்டு ஆதரிக்குமாறு தென்சென்னை மாவட்ட அனைத்திந்திய மாணவர் பெருமன்ற தோழர்கள், பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்தனர். ஏராளமானோர் பாடி பதிவு செய்திருக்கிறார்கள். இதற்காகப் பெருமன்ற பொறுப்பாளர் மணிகண்டன் மீதும் ஆபாச வசவுகள், அச்சுறுத்தல்கள்!

ஒடுக்கப்பட்ட வகுப்பில் பிறந்த துணிச்சல்கார இசைவாணிக்கு, திராவிட, முற்போக்கு, ஜனநாயகச் சக்திகள் துணை நிற்க வேண்டும்.

# சம்பல் கலவரம்!

3 ஆம் பக்கத் தொடர்ச்சி



இஸ்லாமிய இளைஞர்கள் காவல்துறையால் நெஞ்சில் குறி பார்த்து சுடப்பட்டு கொலை செய்யப்பட்டு இருக்கிறார்கள். ஐந்து பேர் இதுவரை கொல்லப்பட்டு இருக்கிறார்கள். இது அப்பட்டமான இந்துத்துவ அரச பயங்கரவாதமே!

## வழிபாட்டுத் தலங்கள் சட்டம் என்ன கூறுகிறது?

வழிபாட்டு தலங்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம், 1991 (The Places Of Worship (Special Provisions) Act, 1991), பாபர் மசூதி ராம ஜென்மபூமி நிலப்பிரச்சினை தவிர்த்து, ஆகஸ்டு15, 1947 ஆம் ஆண்டுக்கு முன்னர் வழிபாட்டுத் தலங்கள் எவ்வாறு இருந்ததோ அப்படியே தொடர்ந்து பராமரிக்கப்பட வேண்டும் என்றும், 1947 ஆகஸ்ட் 15ம் நாளுக்கு முன்னர் வழிபாட்டுத் தலத்தை ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டிருக்கும் பட்சத்தில் அதனை எதிர்த்து வழக்காட முடியாது என்பதும் இச்சட்டத்தின் மையக் கருத்தாகும்.

இச்சட்டத்தின் படி, ஆகஸ்டு 15, 1947க்கு முன்னர் ஒரு சமயத்தினரின் அல்லது ஒரு சமயப் பிரிவின் வழிபாட்டுத் தலத்தை, வேறு சமயத்தினரோ அல்லது ஒரே சமயத்தின் வேறொரு பிரிவினரோ ஆக்கிரமிப்பு செய்திருந்தால் இச்சட்டப்படி, ஆக்கிரமிப்பு நடவடிக்கை எடுக்க முடியாது என்று கூறுகிறது.

## சட்டத்திற்குப் புறம்பான தீர்ப்பு!

உச்ச நீதிமன்றம் முந்தைய தலைமை நீதிபதி சந்திரசூட் தலைமையும் ஞானவாபி மசூதி வழக்கை விசாரித்த போது, இந்தச் சட்டப்படி வழிபாட்டு தலங்களை இன்னொருவருக்கு மாற்றி அளிக்க முடியாது, ஆனால் ஆய்வுகளை மேற்கொள்ளலாம் என்று கலவரக் கும்பலுக்குப் பிள்ளையார் சுழியைப் போட்டு வைத்து விட்டார். இதன் மூலம் அரசமைப்பு உறுதிபாட்டிற்குப் புறம்பாக அவர் நடந்து கொண்டார் என்பதே உண்மை!

ஏற்கனவே பாபர் மசூதி வழக்கில் நம்பிக்கையின் அடிப்படையில் இந்துக்களிடம் அதனை ஒப்படைக்க வேண்டும் என்று தீர்ப்பளித்திருந்தாலும் இப்போது அதில் அவர் அளித்த விளக்கத்தில்தான் கடவுளிடம் வேண்டியதாகவும் இந்த முடிவைத்தான் தீர்ப்பாக அவர் தனக்கு அளித்ததாகவும் கூறியுள்ளார். எந்த நீதிபதிகளும் கையெழுத்து போடாத ஒரு ஒருமித்த தீர்ப்பை இதில் அளித்து உலக அளவில் நீதித்துறைக்குக் களங்கம் விளைவிக்கும் வகையில் அவர் பேசியதும் நினைவில் கொண்டால் இவை அனைத்தும் வெளிச்சத்துக்கு வரும்.

## வெளி ஆட்கள் வர தடை!

வெளியாட்கள் யாரும் இந்தப் பகுதியில் நுழையக்கூடாது என்று தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் எதிர்க்கட்சியான சமாஜ்வாதி கட்சி, இடதுசாரிகள், காங்கிரஸ் கட்சி ஆகியவை இந்த விவகாரத்தில் தலையிடுவதற்கு முன்னதாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. கலவரம் வெடிக்கும் முன்பு தடுக்க எந்த நடவடிக்கை எடுக்காத இவர்கள் இதற்கு மட்டும் விரைந்து நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்!

சம்பலுக்குச் செல்லும் கட்சித் தலைவர்கள் குழுவை தலைமை தாங்கும் எதிர்க்கட்சித் தலைவர் மாதா பிரசாத் பாண்டே, கூறுகையில், 'உள்துறைச் செயலாளர் சஞ்சய் பிரசாத் தன்னை சம்பலுக்கு அழைத்துச் செல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொண்டதாக' குறிப்பிட்டுள்ளார். சம்பல் எம்பி ஜியாஉர்ஹ்மான் பாக் சம்பலுக்குச் செல்லும்போது தடுத்து நிறுத்தப்பட்டதாகக் கூறியுள்ளதும் எதைக் காட்டுகிறது? உண்மை வெளிச்சத்துக்கு வந்துவிடும் நல்லிணக்கம் வந்து விட்டால் நர மாமிசம் சாப்பிடும் இந்துத்துவ அரசியல் அங்கே எடுபடாமல் போய்விடும் என்பதாலா?

தொடர்புக்கு: 9444481703

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

கொள்ளக்கூடியவர்கள் கூடிய ஓர் அற்பத்தனமான ஆட்சியாக நடைபெற்று வரும் அவலம்.

நமது அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள மதச்சார்பின்மை, சோசலிசம் என்னும் உயரிய சொற்களை நீக்கிட வேண்டும் எனப் பல்வேறு இடையூறுகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்தனர். பாஜகவின் மூத்த தலைவர்களில் ஒருவரான சுப்பிரமணியசாமி உள்ளிட்ட சங் பரிவாரங்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்கும் தொடர்ந்தனர். அவர்களின் அருவருக்கத்தக்க ஆசையை உச்சநீதிமன்றம் நிராகரித்துவிட்டது.

நீதிமன்றம் நிராகரித்து இருந்தாலும், பாஜகவின் எஜமானனான ஆர்எஸ்எஸ்ஸின் விருப்பமாக மட்டுமின்றி, கொள்கையாக உள்ளது என்பது மதச்சார்பின்மை, சோசலிசம் என்பது கூடாது என்பதே.

ஒரே நாடு, ஒரே மதம், ஒரே நாடு, ஒரே கட்சி என்கிற நிலைப்பாட்டில் உறுதியுடைய அமைப்புதான் ஆர்எஸ்எஸ். அதனுடைய அரசியல் பிரிவுதான் பாஜக.

இத்தகைய படு பிற்போக்கான கட்சி இன்று, ஒன்றிய ஆட்சி அதிகாரத்தில் கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக மோடியின் தலைமையில் அமர்ந்துள்ளது.


ஒரே நாடு, ஒரே தேர்தல் என்பதன் மூலம் நமது நாடாளுமன்ற ஜனநாயக முறையை அகற்றி, அதிபர் ஆட்சி முறையை வலுக்கட்டாயமாகத் திணிக்கத் துடிக்கின்றது.

மொத்தத்தில் ஜனநாயகத்தில் நம்பிக்கையற்ற, சர்வாதிகாரத்தில், பாசிசத்தில் உறுதியான பற்று உடையவர்கள் அதிகாரப் பீடத்தில் அமர்ந்துள்ளார்கள் எனில் அது மிகையல்ல!

மீண்டும் சந்திப்போம்,

வணக்கம்,

தோழமைமிக்க,



(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

## நிறைவு நாளில் கம்மத்தில் பேரணி:

இதேபோல், நூற்றாண்டு நிறைவு நாளான 2025டிசம்பர் 26 அன்று வீரத் தெலுங்கானா போராட்டம் நடந்த, கம்மத்தில் கொண்டாட்டங்களின் நிறைவாக மாபெரும் பேரணி மற்றும் பொதுக்கூட்டம் நடத்தப்படும்.

சண்டிகரில் நடைபெறவிருக்கும் கட்சிப் பேராயத்துக்கு முன்னதாக, மாநில, மாவட்ட, இடைக்குழு, கிளை மாநாடுகளை உயிர்த் துடிப்போடும் உணர்வோடு இணைந்தும் கட்சியை வலுவுற கட்டியமைக்க, புத்துயிரூட்ட, புதிய இளைஞர்களை, பெண்களை பொறுப்புக்கு கொண்டு வர, இவற்றின் மூலம் கட்சி புதுப்பிக்கப்பட ஒன்றுபட்டு செயல்படுவோம்! உற்சாகத்தோடும் உறுதியோடும், தியாகங்களையும் அளப்பரிய போராட்டங்களையும் கொண்ட பெருமிதம் மிக்க நமது கட்சியின் நூற்றாண்டு விழாவை பயன் தரும் வகையில், பலரும் அறியும் வகையில், உற்சாகத்தோடு கொண்டாடுவோம்!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது கட்சிப் பேராயம் வெல்லட்டும்!

டி.எம்.மூர்த்தி

# கலை இலக்கியப் பூங்கா



ஆ.சிவசுப்பிரமணியன்

# பேசாப் பொருள் உணர்த்தும் சமூக அவலம்
# கி.ராஜநாராயணனின் ‘கதவு’

உமுதவன் கணக்குப் பார்த்தால் உழவுக் கோலும் மிஞ்சாது (பழமொழி)

தூத்துக்குடி மாவட்டத்தில் கன்னியாகுமரி சென்னை நெடுஞ் சாலையில் கோவில்பட்டி நகருக்கும் திருநெல்வேலி நகருக்கும் இடையே நெடுஞ்சாலைக்குக் கிழக்கே உள்ள ஒரு சிறிய கிராமம் இடைசெவல். மழையை நம்பி கரிசல் நில வேளாண்மை மேற்கொண்டு வாழும் உழுகுடிகளைக் கொண்ட சிற்றூர். பல கரிசல் கிராமங்களைப் போல் இடைசெவலும் தனித்துவமான அடையாளம் எதுவுமில்லாத கிராமமாகவே இருந்தது. ஆனால் இங்கு தோன்றிய இருவர் தம் எழுத்துக்களால் இந்த ஊருக்கு ஓர் அடையாளத்தை வழங்கி விட்டனர்.

முதலாமவர் கு.அழகிரிசாமி. தான் பிறந்த ஊருக்கு மட்டுமின்றி ஓரளவுக்கு அருகில் உள்ள குமாரபுரம் என்ற ஊருக்கும் ‘குமாரபுரம் ரயில்வே ஸ்டேசன்’ என்ற சிறுகதையின் வழி அடையாளம் வழங்கியவர். கரிசல் இலக்கியம் என்ற சொல்லைப் பயன்படுத்தாமலேயே கரிசல் இலக்கியத்திற்கு வித்திட்டவர்.

இரண்டாமவர் கி.ராஜநாராயணன். இவர் கரிசல் மண்ணைக் களமாகக் கொண்டு, சிறுகதை, நாவல், நாட்டார் கதைகள் சேகரிப்பு, கரிசல் சொல்லகராதி எனக் களத்தை விரிவுபடுத்தியவர். முன்னத்தி ஏர் பிடித்தவர் என்ற பாராட்டையும் பெற்றவர்.

இங்கு அறிமுகமாகும் கதவு சிறுகதை தாமரை இதழில் வெளியானது. பின்னர் வெளியான இவரது முதல் சிறுகதைத் தொகுப்பு ‘கதவு’ என்ற பெயரைத் தாங்கி நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தால் வெளி யிடப்பட்டது.

கதையின் தலைப்பை நினைவூட்டுவது போன்று கதவு விளையாட்டில் இருந்தே கதை தொடங்குகிறது. அதென்ன கதவு விளையாட்டு? என்கிறீர்களா! பழையகால தடித்தஒற்றைக் கதவுவீட்டில்வாழ்ந்தவர்கள், வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் எளிதில் புரிந்துகொள்வார்கள்.

### ஒற்றைக் கதவு:

ஒற்றைக் கதவென்பது நீளமான இரண்டு கனத்த பலகைகளை இணைத்து உருவாக்கப்படுவது. அதன் கீழ்ப்பகுதி, நடுப்பகுதி, மேற்பகுதி என்ற மூன்று பகுதிகளிலும்இடமிருந்துவலமாகதடிமனான கட்டைகளைப் பெரிய ஆணிகளால் அடித்துப் பொருத்தியிருப்பார்கள். தென் மாவட்டங்களில்இதனைக் “கம்பை” என்ற பெயரால் அழைப்பார்கள் (பார்க்க: ஓவியம்). கதவின் பின்புறத்தில் மேலொன்று கீழ் ஒன்றாக கனமான இரும்புப்பட்டை அடிக்கப்பட்டிருக்கும். இப்பட்டையின் இடப்பகுதியின் அமைப்பானது, மண்வெட்டி, கோடாலி ஆகிய இரும்புக் கருவிகளில் உருண்டை வடிவில் செதுக்கப்பட்ட மரக்காம்பைப் பொருத்தும் வகையில் காணப்படும் வட்டமான துவாரத்தைப் போன்றிருக்கும்.

கதவின் பளுவைத் தாங்கும் வகையில் அமைக்கப்பட்ட நிலையின் இடது பக்கத்தில் ‘ட’ என்ற எழுத்துவடிவில் அமைந்த இரு கொண்டிகளை மேல் ஒன்று கீழ் ஒன்று என வீட்டின் உள்பக்கப் பகுதி நிலையில் பொருத்தி வைப்பார்கள். கதவின் பட்டைப் பகுதியில் உள்ள துவாரத்தினுள் ட எழுத்தின் உச்சியை நுழைத்து விட்டால் கதவைத் திறக்கவும் அடைக்கவும் முடியும்.

இந்தவகைக் கதவுதான் இக்கதையின் நாயகன். இக்கதவின் அடிப்பகுதிக் கட்டையில்சிலகுழந்தைகள்ஏறிநடுப்பகுதிக் கட்டையைப் பிடித்துக்கொண்டு நிற்க கதவக்குப் பின்னால் நிற்கும் குழந்தைகள் கதவை முன்னே தள்ளும். இது தான் கதவு விளயாட்டின் தொடக்கம். இதை ஒரு நேர்முக வருணனையாக ராஜநாராயணன் வருணிப்பது வாசிப்பவரைப் பார்வையாளராக்கி விடுகிறது. அவரது வருணனையை வாசிப்போமா! கதவு சிறுகதை இப்படித்தான் தொடங்குகிறது:

### கதவு ஆட்டம் :

‘கதவு ஆட்டம் ஆரம்பமாகியது. பக்கத்து வீட்டுக் குழந்தைகளும் ஆரவாரத்தோடு கலந்துகொண்டார்கள்.’

“எல்லாரும் டிக்கெட்டு வாங்கிக்கிடுங்க” என்றான் சீனிவாசன். உடனே “எனக்கொரு டிக்கட் உனக்கொரு டிக்கட்” என்று சத்தம் போட்டார்கள். “எந்த ஊருக்கு வேணும்? ஏய் இந்த மாதிரி இடிச்சித்தள்ளினா என்ன அர்த்தம். அப்புறம் நான் விளையாட்டுக்கு வரமாட்டேன்”. “இல்லை, இல்லை, இடிச்சித் தள்ளலெ”. “சரி எந்த ஊருக்கு டிக்கெட் வேணும்?”

‘குழந்தைகள் ஒருவருக்கொருவர் முகத்தைப் பார்த்துக் கொண்டார்கள். ’ஒருவன் “திருநெல்வேலிக்கு” என்று சொன்னான். “திருநெல்வேலிக்கு” “திருநெல்வேலிக்கு” என்று கூப்பாடு போட்டுச் சொன்னார்கள் எல்லோரும்... “சீனிவாசன் வெறுங்கையால் டிக்கெட் கிழித்துக் கொடுத்து முடிந்ததும் கதவில் பிடித்துத் தொத்திக்கொண்டார்கள். சிலர் கதவை முன்னும் பின்னும் ஆட்டினார்கள். தன் மீது ஏறி நிற்கும் அக்குழந்தைகளை அந்த பாரமான பெரிய கதவு பொங்கிப்பூரித்துப்போய் இருக்கும் அக்குழந்தைகளை வேகமாக ஆடி மகிழ்வித்தது. “திருநெல்வேலி வந்தாச்சி” என்றான் சீனிவாசன். எல்லோரும் இறங்கினார்கள். கதவைத் தள்ளியவர்கள் டிக்கெட் வாங்கிக் கொண்டார்கள். ஏறினவர்கள் தள்ளினார்கள். மீண்டும் கதவு ஆட்டம் தொடங்கியது.’



### நொடித்துப்போன குடும்பம்

கதவாட்டத்துடன் கதையைத் தொடங்கிய கி.ரா. கதவு இருக்கும் குடும்பத்தை அறிமுகம் செய்கிறார். அது ஒரு வாழ்ந்து கெட்ட குடும்பம். லட்சுமி, சீனிவாசன் என்ற பெயரைக் கொண்ட இரு குழந்தைகளுடன் ஒரு கைக்குழந்தையும் குடும்ப வாரிசுகள். இவர்களின் அம்மா ஊரில் விவசாயத் தொழிலாளி. அப்பாவுக்குத் தொலைவில் உள்ள மணிமுத்தாறில் கூலி வேலை. கைக்குழந்தையைப் பார்த்துக் கொள்வது இவர்களது பொறுப்பு. கதவு இவர்களது விளையாட்டுத் தோழன். கதவின் உரிமையாளர்கள் என்ற நிலையில் தீப்பெட்டிப் படங்களைக் கதவில் சோற்றுப் பசையால் ஒட்டிவைக்கும் உரிமை இவர்களுக்கு உண்டு. இந்த அறிமுகத்தை அடுத்து கதை சில நகர்வுகளைச் சந்திக்கிறது. அவற்றை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

### தலையாரி வருதல்

குழந்தைகள் இரண்டும் தனியாக இருக்கும் போது கிராமத் தலையாரி வந்து தீர்வைப் (நிலவரி) பாக்கி கட்ட வேண்டும் என்பதை அவர்களது அம்மாவிடம் நினைவூட்டச் சொன்னார். மறுநாள் அவர்களது அம்மா இருக்கும் போதே தலையாரி வந்து தீர்வைப் பாக்கி கேட்டார். அம்மாவின் பதில் இப்படி இருந்தது:

“மூணு வருஷமா மழை தண்ணி இல்லையே. நாங்க என்னத்தை வச்சு உங்களுக்கு தீர்வைப் பாக்கியைக் கொடுப்போம்? ஏதோ காட்டிலே போய்க் கூலி வேலை செய்து இந்தக் கொளந்தைகளைக் காப்பாத்றதே பெரிய காரியம். உங்களுக்குத் தெரியாததா?”

இச்சொற்கள் தலையாரின் உள்ளத்தைத் தொடவில்லை. “இந்த வருஷம் கண்டிப்பா தீர்வை போட்றணும். அப்புறம் எங்கமேலே சடைச்சிப் புண்ணியமில்லை” என்று சொல்லிவிட்டுச் சென்று விட்டார்.

### கதவின் பயணம்

ஒரு நாள் காலையில் நான்கு பேருடன் வந்து கதவைக் கழற்றினார் தலையாரி. பின் அந்நால்வரும் அதைத் தலையில் சுமந்தவாறு புறப்பட்டார்கள். இதைப் பார்த்த குழந்தைகளின் செயலைக் கி.ரா. இவ்வாறு காட்சிப்படுத்துகிறார்: “ஒருவன் நாதஸ்வரம் வாசிப்பவனைப் போல் கைகளை வைத்துக் கொண்டு பீப்பீஞ்பீ.. என்று சத்தம் கொடுத்தான். இன்னொருவன் இரண்டு கைகளாலும் ஆள்காட்டி விரல்களை நீட்டிக்கொண்டு உடலைப் பின் வளைத்துத் துடைகளின் மேல் ஓங்கி அடிப்பதாகப் பாவனை செய்து ‘திடும்ஞ்.. திடும்ஞ் ததிக்குணஞ்.. ததிக்குண’ என்று தவுல் வாசிப்பவனைப் போல முழங்கினான்.”

இப்படி குழந்தைகளின் ஊர்வலத்தைப் பொறுக்க முடியாது தலையாரி அவர்களை விரட்டி விட்டான்.

### கதவில்லா அவலம்

கார்த்திகை மாதம் ஆதலாலால் கதவில்லாத வீட்டிற்குள் குளிர்வாடை தாங்கமல் கைக் குழந்தை இறந்து போனது. கதவில்லாததால் நாய் நுழைந்து காய்ச்சி வைத்த கஞ்சியைக் குடித்துவிட்டுச் சென்றுவிட்டது. குடும்பமே பட்டினி. புதிதாகக் கிடைத்த தீப்பெட்டிப் படத்தை ஒட்டிவைக்கக் கதவு இல்லை.

### கண்ணில் பட்ட கதவு

கிராமச் சாவடியில் கதவு இருப்பதை ஒருநாள் சீனிவாசன் தற்செயலாகக் கண்டு, தன் அக்காவை அழைத்துவந்து காட்டுகிறான். கதவை மீண்டும் கண்டு அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கோர் அளவில்லை. மண்ணில் கிடந்த கதவில் படிந்திருந்த கரையான் மண்ணை லட்சுமி தன் ஆடையால் துடைக்கிறாள். கதை முடிகிறது.

### கதை வெளிப்படுத்தும் செய்தி

இக்கதையின் தலைப்பும் அதன்உள்ளடக்கமும்கதவுஎன்ற ஓர் அஃறிணைப் பொருளைச் சுற்றியே அமைந்துள்ளன. குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள ‘கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி” என்று தொடங்கும் செய்யுள் (எண்2) பலரும் அறிந்த ஒன்று. இச்செய்யுளில் வண்டை நோக்கித் தலைமகன் பேசுகிறான். சிற்றிலக்கிய வரிசையில் இடம்பெறும் நூல்கள் சில, நெல், கிளி, காகம், பணம், செருப்பு என அஃறிணைப் பொருள்களைத் தூது உரைக்கப் பயன்படுத்தி உள்ளன. நன்னூல் இலக்கண ஆசிரியர் ‘கேட்குந போலும் கிளக்குந போலும்’ என்று தொடங்கும் நூற்பாவின் வழி அஃறிணைப் பொருள் ஒன்றைப் பேசுவது போலவும், கேட்பது போலவும் படைக்கும் இலக்கிய உத்திக்கு அனுமதி வழங்கியுள்ளார்.

இங்கு கதவு என்ற அஃறிணைப் பொருள் பேசவுமில்லை. காது கொடுத்துக் கேட்கவுமில்லை. அது மரப் பொருளாகவே இருக்கிறது. ஆனால் ஒருவிதமான சோகத்தையும் கோபத்தையும் வாசிப்பவனிடம் தோற்றுவிக்கிறது. தலையாரியிடம் வீட்டின் தலைவி கரிசல் நில விவசாயியின் அவலத்தை வெளிப்படுத்துகிறாள். கதவைக் கழற்றி எடுத்துச் சென்றபின் நிகழ்வனவும், விளையாட்டுத் தோழன் ஒருவனைப் பிரிந்தது போல் லட்சுமியும் சீனிவாசனும் வருந்துவதும் அவலத்தின் வடிவம்தான். வரி கட்டாதவர் வீட்டிலிருந்து கைப்பற்றி எடுத்துவரப்பட்ட பொருள்கள் ஏலத்தில் விடப்படும் என்ற உண்மையறியாது லட்சுமியும் சீனிவாசனும் சாவடியில் கதவைக் கண்டவுடன் மகிழ்வதும் கதவைத் தன் பாவாடையால் லட்சுமி துடைப்பதும் கூட ஒருவகையில் அவலம்தான். கதையின் தொடக்கத்தில் ஒரு துணியால் லட்சுமி கதவைத் துடைத்ததும் நினைவுக்கு வருகிறது. கதவின் மீது கொண்டுள்ள பாசப் பிணைப்பை இச்செயல் வெளிப்படுத்துகிறது. இவையெல்லாம் தனிமனித அவலம். ஆனால் கதவின் வழி கி.ரா உணர்த்த விரும்புவது வேறு.

வானம் பார்த்த பூமியில் வேளாண்மை செய்பவன் வீட்டில் மதிப்புறு பொருள் எதுவும் இல்லாத நிலையில் அவன் வீட்டுக் கதவுதான் மதிப்புறு பொருளாக விளங்குவதையும் வரி கட்ட இயலாத நிலையில் இதுவும்கூட அரசால் கைப்பற்றப் படும் சமூக அவலத்தையும்தான்.

தொடர்புக்கு: 9442053606

# உலகளாவிய சமாதானத்திற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி

**சமாதானம் மற்றும் முன்னேற்றத்திற்கான இந்திய டாக்டர்கள் சங்கத்தின் சார்பில், டெல்லியில் போர்களுக்கு எதிரான சர்வதேசக் கருத்தரங்கம் டிசம்பர் 1 ம் தேதி நடைபெற்றது. இதில் உலக சமாதானக் கவுன் சிலின் தலைவர் பல்லப்சென் குப்தா ஆற்றிய உரையின் சுருக்கம்.**




◆ ஐடிபிடி கருத்தரங்கை, அவ்வமைப்பின் அகில இந்தியத் தலைவர் டாக்டர் அருண்மித்திரா துவக்கி வைத்து உரையாற்றுகிறார். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த டாக்டர் ரூத் மிட்ச்சேல், டாக்டர் சூடன், இலங்கையைச் சேர்ந்த டாக்டர் அசோகா, நேபாளத்தைச் சேர்ந்த டாக்டர் கணேஷ் குருங் ஆகியோர் உள்ளனர்.

இன்று, உலகெங்கிலும் நடந்துகொண்டிருக்கும் போர்கள் எந்த ஒரு தனி நாட்டை மட்டும் பாதிக்கவில்லை.அனைத்து நாடுகளையும் பாதிக்கும் பிரச்சினையாக உள்ளன.

இஸ்ரேல், பாலஸ்தீன மக்கள் மீதும் லெபனான் மீதும் நடத்தும் தாக்குதல்கள் மற்றும் ரஷ்யாஉக்ரைன் போர் அவை நடைபெறும் பகுதிகளில் உள்ள மக்களை மட்டும் பாதிப்படையச் செய்யவில்லை. உலக மக்களையே பாதிப்படையச் செய்கிறது. உலகப் பொருளாதாரத்தையே சீர்குலைக்கிறது. மக்களை இடம்பெயரச் செய்துள்ளன; அகதிகளாக்கியுள்ளன.

உலக சமாதானம் மற்றும் பாதுகாப்பை அச்சுறுத்துலக்கு உள்ளாக்கியுள்ளன.

உக்ரைன் மற்றும் பாலஸ்தீனத்தில் கடும் நெருக்கடிகளை மக்கள் சந்திக்கின்றனர்.

மக்களின் இடப்பெயர்ச்சி, மற்றும் பதற்றம் ஆகியவை பாதிக்கப்பட்ட பகுதிகளை மட்டுமல்ல, சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை அச்சுறுத்துகின்றது.

இந்த நெருக்கடிகளை நாம் தனிப்பட்ட நெருக்கடிகள் என்று கருதாமல், உலகளாவிய சமாதான இயக்கத்திற்கு ஏற்பட்ட நெருக்கடியாகப் பார்க்க வேண்டும்.

ஒருங்கிணைந்த தீர்வு தேவைப்படும், ஒன்றோடொன்று பிணைக்கப்பட்ட, பின்னிப்பிணைந்த, ஏகாதிபத்தியங்களால் உருவாக்கப்பட்ட அச்சுறுத்தல்களாக பார்க்க வேண்டும்.

இந்த மோதல்களில் அமெரிக்க ஏகாதிபத்தியம், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நேட்டோவின் நடவடிக்கைகளை அம்பலப்படுத்துவதில் சமாதான இயக்கத்திற்கு முக்கிய பங்கு உள்ளது. அமைதியான மற்றும் அர்த்தமுள்ள தீர்வுகளுக்கு போராடுகிறது.

நேரடியாக பாதிக்கப்பட்டவர்களுடன் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை வலுப்படுத்துகிறது.

இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை கண்டிக்க வேண்டும். சுயநிர்ணயத்திற்கான பாலஸ்தீனியர்களின் உரிமைகளை மதிக்க வேண்டும். அங்கீகரிக்க வேண்டும்.

இஸ்ரேலின் நீண்டகால ஆக்கிரமிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று அழைப்பு விடுக்கும் ஒரு நியாயமான தீர்மானத்தை உலக சமாதான கவுன்சில் ஆதரிக்கிறது.

பாலஸ்தீன மக்களுக்கு சர்வதேச ஒருமைப்பாட்டை, ஆதரவை அணிதிரட்டுவதில் உலக சமாதான கவுன்சில் முன்னணியில் உள்ளது.

1967க்கு முந்தைய எல்லைகளுடன் கூடிய பாலஸ்தீன அரசை நிறுவுவ வேண்டும். கிழக்கு ஜெருசலேமை அதன் தலைநகராகக் கொண்டு, இரண்டுநாடுகள் என்ற தீர்வின் அடிப்படையில் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உலக சமாதான கவுன்சில் ஆதரவு இயக்கங்களை நடத்துகிறது.

காஸாவில், இஸ்ரேலின் தொடர்ச்சியான வான்வழித் தாக்குதல்கள் மற்றும் இராணுவ நடவடிக்கைகள் ஆயிரக்கணக்கான வீடுகள், பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகளை அழித்துள்ளன.

ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் நீர் விநியோக அமைப்புகள் உட்பட முக்கியமான உள்கட்டமைப்புகள் தகர்க்கப்பட்டுள்ளன.

லெபனானிலும், இதே போன்ற இஸ்ரேலின் தாக்குதல்களால் குடியிருப்புப் பகுதிகள் மற்றும் அத்தியாவசிய கட்டமைப்பு வசதிகள் தகர்க்கப்பட்டுள்ளன.

ரஷ்யாஉக்ரைன் போர் நீண்டகால புவிசார் அரசியல் மற்றும் கலாச்சார பதட்டங்களில் இருந்து உருவாகிறது.

2014 ஆம் ஆண்டு கிரிமியாவை இணைத்ததில் இருந்து, டான்பாஸில் ரஷ்ய மக்கள் மீதான தொடர்ச்சியான தாக்குதல்கள் மற்றும் 2022 இல் இருந்து நடந்து வரும் போர், நேட்டோவை கிழக்கு நோக்கி விரிவாக்கம் செய்தல் ஆகியவை, பிராந்திய அமைதி மற்றும் மற்றும் சமாதானத்திற்கு அச்சுறுத்தல்களை அதிகரித்துள்ளன.

ரஷ்ய உக்ரைன் போரின் தன்மையும் மாறிவிட்டது. தற்போது உக்ரைன் மண்ணில் ரஷ்யாவுக்கும் மேற்குலகுக்கும் இடையே நிழல் யுத்தம் நடந்து வருகிறது.

இதற்கிடையில், உக்ரைன் போருக்கான மேற்கு நாடுகளின் நிதி உதவி முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளது.

2022 ஆம் ஆண்டின் முற்பகுதியில் மோதல் தீவிரமடைந்ததில் இருந்து அமெரிக்கா மட்டும் 113 பில்லியனுக்கும் அதிகமான டாலர்களை இராணுவ மற்றும் நிதி உதவியாக உக்ரைனுக்கு வழங்கியுள்ளது.

ஐரோப்பியஒன்றியம்மற்றும்பிறநேட்டோ நாடுகளும் பல பில்லியன் டாலர்களை உக்ரைனுக்கு வழங்கியுள்ளன.அதி நவீன ஆயுதங்களையும் வழங்கியுள்ளன.

அனைத்து வகையான ஆக்கிரமிப்புகளையும் நாம் கண்டிக்க வேண்டும். போரை உடனடியாக நிறுத்த வேண்டும். நேட்டோவின் கிழக்கு நோக்கி விரிவாக்கம் செய்வதை நிறுத்துவதன் மூலமும், ரஷ்யாவை சுற்றி வளைக்கும் கொள்கையை அகற்றுவதன் மூலமும், நேரடியாக பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகள் மற்றும் அபிலாஷைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் பேச்சுவார்த்தைகளின் மூலமும் மட்டுமே நிலையான அமைதியை, சமாதானத்தை அடைய முடியும் என்று உலக சமாதான கவுன்சில் நம்புகிறது.

7.8 மில்லியனுக்கும் அதிகமான உக்ரேனியர்கள் தங்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். இது இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஐரோப்பாவில் மிகப்பெரிய அகதிகள் நெருக்கடியை உருவாக்கியுள்ளது.

ரஷ்யாஉக்ரைன் போர் கோதுமை, சூரியகாந்தி எண்ணெய் மற்றும் உரங்களின் உலகளாவிய விநியோகத்தை சீர்குலைத்துள்ளது.

ஏனெனில் இந்த நாடுகள் முக்கிய ஏற்றுமதியாளர்களாக உள்ளன.

கருங்கடல் முற்றுகை கோதுமை விலையை உயர்த்தியுள்ளது.

ஆப்பிரிக்கா மற்றும் மத்திய கிழக்கில் உணவுப் பாதுகாப்பை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளது.

ரஷ்யாவின் எரிவாயுவை ஐரோப்பா நம்பியிருப்பது அவற்றை பாதிப்படையச் செய்துள்ளது. ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைகள் மற்றும் மாற்று எரிசக்தி ஆதாரங்களுக்கான தேடுதல் ஆகியவை எரிசக்திப் பொருட்களின் விலைகளை அதிகரித்துள்ளன.

ரஷ்ய உக்ரைன் போர், உலகளாவிய நுகர்வோர் மற்றும் வணிகங்களை பாதிப்படையச் செய்துள்ளது. ரஷ்யா உக்ரைன் போர் பனிப்போர் போன்ற மோதல்களை புதுப்பித்துள்ளது.

நேட்டோ நாடுகள் உக்ரைனுக்கு ஆதரவளிக்கின்றன. அதே நேரத்தில் சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகள் நடுநிலைமையை பராமரிக்கின்றன அல்லது ரஷ்யாவை நோக்கி சாய்ந்துள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையும் மற்ற அமைதி காக்கும் அமைப்புகளும் இந்த மோதல்களைத் தீர்ப்பதில் செயல்திறனற்று உள்ளன. இது விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது.

உலகளாவிய இராணுவ செலவினம் ஆண்டுதோறும் 2.2 டிரில்லியன் டாலர்களாக அதிகரித்துள்ளது. இது காலநிலை மாற்றம், வறுமை ஒழிப்பு சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற முக்கியமான பிரச்சினைகளிலிருந்து வளங்களை திசை திருப்புகிறது.

அனைத்து நாடுகளின் பிரதேச ஒருமைப்பாடு ,இறையாண்மை, சுயநிர்ணய உரிமையை மதிக்கும் கொள்கைகளை முன்னிறுத்தி,சர்வதேச சமாதான இயக்கத்தை வலுப்படுத்த வேண்டும்.

ஆயுதப் போட்டிக்கு தீர்வு காண்பது முக்கியமானது. ஆயுத உற்பத்தி மற்றும் வர்த்தகத்தை கட்டுப்படுத்த சர்வதேச ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அனைத்துப் பிரச்சினைகளுக்கும் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகளை காண வேண்டும்.

**தமிழில்**
**டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத்.**

# ஒன்றிய ரயில்வே அமைச்சரிடம் வை.செல்வராஜ் எம்பி மனு



நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் மற்றும் ரயில்வே வாரியத் தலைவர் சதீஷ்குமார் ஆகியோரை 29.11.2024 அன்று தனித்தனியே சந்தித்து, நாகப்பட்டினம் தொகுதி மக்களின் ரயில்வே துறை சார்ந்த கோரிக்கை மனு அளித்தார்.


அதில், காரைக்கால், தஞ்சாவூர், திருவாரூர் மயிலாடுதுறை வழித்தடத்தை விரைந்து இரட்டை வழிப் பாதையாக மாற்ற வேண்டும். நீண்டநாள் கோரிக்கையான மதுரைபுனலூர் விரைவு ரயிலை காரைக்காலுக்கு நீட்டிக்க வேண்டும். மதுரைக்கு நேரடி ரயில் இல்லாததால் வேளாங்கண்ணியில் இருந்து நாள்தோறும் காலையில் மதுரைக்கு ஒரு ரயில் இயக்க வேண்டும். மீட்டர் கேஜ் காலத்தில் இயங்கிய கம்பன் விரைவு ரயிலை மீண்டும் காரைக்குடி, பட்டுக்கோட்டை, திருவாரூர் மார்க்கமாக கம்பன் எக்ஸ்பிரஸ் பெயரில் இயக்க வேண்டும். சென்னையில் இருந்து காரைக்காலுக்கும், ராமேஸ்வரத்திற்கும் பகல் நேரத்தில் விரைவு ரயில் இயக்க வேண்டும். திருத்துறைப்பூண்டி அகஸ்தியம்பள்ளி பாதையைக் கோடியக்கரை வரை நீட்டிக்க வேண்டும். சென்னைக்கும், பெங்களூருக்கும் விரைவு ரயில் இயக்க வேண்டும். திருவாரூரில் இருந்து விழுப்புரம் வரை காலையில் செல்லும் ரயிலை தாம்பரம் வரை நீட்டிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை விரைந்து நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

## ஜனசக்தி வளர்ச்சி நிதி

கோவை குனியமுத்தூர் கட்சிக் கிளை உறுப்பினர் கரவழி மாதப்பூர் பி.முருகேசன் வள்ளியம்மாள் ஆகியோரின் இளைய மகன் டாக்டர் எம்.ராஜாமணி, பொறியாளர் ஆர்.அதிஷ் (போர்ட் பிளேயர் அந்தமான்) ஆகியோர் திருமண வரவேற்பு விழாவில், கட்சியின் மாவட்ட நிர்வாக உறுப்பினர் பெ.மௌனசாமி, கட்சி கிளைச் செயலாளர் ஆர்.ராமசாமி, நந்தகுமார் ஆகியோர் பங்கேற்று வாழ்த்தினர். அப்போது ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூபாய் 5,000 வழங்கப்பட்டது.


கோவை சூலூர் வடக்கு வட்டாரம் கரையாம் பாளையம் கட்சிக் கிளை உறுப்பினர்கள் எம்.கனகராஜ்லட்சுமி ஆகியோரின் மகன், இளைஞர் பெருமன்ற கிளைத் தலைவர் கே.சரத்குமார், பி.ரேஷ்மா ஆகியோரின் மணவிழாவில், கட்சியின் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் மௌனசாமி, சூலூர் வடக்கு வட்டாரச் செயலாளர் பி.எஸ்.ராமசாமி, தமிழ்நாடு விவசாயச் சங்க மாவட்ட தலைவர் சு. பழனிசாமி, மயிலம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் சாரதாமணி கட்சியின் வடக்கு வட்டாரக் குழு உறுப்பினர் கே.ஆர்.குமார் ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர். அப்போது ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூபாய் 2,000 அளிக்கப்பட்டது.

# விஷமத்தனமான ஒன்றிய அரசின் விஸ்வகர்மா திட்டம்



ந.சேகரன்

**சட்டமும் சரி, திட்டமும் சரி மக்கள் மீது தாக்கம் செலுத்தும் தன்மையைக் கொண்டவை. இரண்டுமே கூட்டு ஆலோசனை விவாதம் கருத்திசைவு அடிப்படையில் உருவாக்கப்பட வேண்டியவை.**




தற்போதைய ஒன்றிய மோடி அரசைப் பொறுத்த வரையில், நாடாளுமன்றங்களில் எதிர்க்கட்சிகளை வெளியே அனுப்பி விட்டு, அவர்களது விவாதக் கருத்துகள் ஆலோசனைகள் திருத்தங்கள் இல்லாமலே சர்வாதிகாரத்தனமாகச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதை நாமறிவோம்.

அதேபோல நாட்டு மக்களுக்கான ஒரு திட்டம் அறிவிப்புச் செய்வதற்கு முன் அந்தத் திட்டம் குறித்து மாநில அரசுகளைக் கலந்து ஆலோசிப்பது என்ற நடைமுறையைத் தற்போதைய மோடி அரசு சற்றும் கருத்தில் கொள்வதில்லை. மாநில அரசுகள் உடன்படாத பல்வேறு திட்டங்களை ஒன்றிய அரசு தன்னிச்சையாக அறிவித்து அதை நடைமுறைப்படுத்த எத்தனிப்பது என்பது நாட்டின் கூட்டாட்சி முறைக்கு வேட்டு வைக்கும் அபாயகரமான நடவடிக்கைகளாகும்.

அந்த வரிசையில் தற்போது விவாதத்திற்குரிய திட்டமாக குலத்தொழில் என்ற பெயரில் சம்பந்தப்பட்ட சாதி மக்களது மாணவர்கள் உயர்கல்வி பெற விடாது தடுக்கும் வகையில் சாதி அடிப்படையிலான குலத் தொழிலைத் தான் மேற்கொள்ள வேண்டும் என்ற நிர்ப்பந்தப்படுத்தும் விஷமத்தனதான ‘‘விஸ்வகர்ம யோஜானா’’ என்ற திட்டத்தை ஒன்றிய அரசு நடைமுறைப்படுத்த முனைந்துள்ளது.

### விஸ்வகர்ம திட்டம் அறிவிப்பின் பின்னணி

2023 ஆகஸ்டில் இந்திய சுதந்திரத் தினக் கொண்டாட்டத்தின் போது இந்திய பிரதமர் நரேந்திர மோடி தனது சுதந்திர தின உரையில் குறிப்பிட்ட பி.எம்.விஸ்வகர்மா என்ற பெயரில் பாரம்பரியத் தொழிற்கலைஞர்களுக்கு நிதியுதவி செய்யப்படும் என அறிவித்தார். ஆனால், மோடியாரின் பிறந்த நாள் 2023 செப்டம்பர்.17 இல் அமலாக்கப்படுவதாக விளம்பரபடுத்தினர்.

### இந்தத் திட்டத்தின் நோக்கம் என்ன?

இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை, குரு சிஷ்ய பரம்பரை முறையை வளர்த்தெடுப்பதும் கருவிகள் மூலமும் கைளின் மூலமும் பொருட்களைச் செய்யும் கைவினைக் கலைஞர்கள் குடும்பம் சார்ந்து இயங்குவதை வலுப்படுத்துவதும்தான் இதன் நோக்கம் என்று கூறப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் ‘முதல் தவணையாக ஒரு லட்ச ரூபாய் வரை 18 மாதங்களில் கட்டி முடித்த பிறகு கடனும், இரண்டாம் தவணையாக 2 லட்சம் ரூபாய் கடன் 5 சத வட்டியுடன் வழங்கப்படுமாம். ஆண்டு ஒன்றுக்கு வெறும் 2600 கோடி ரூபாய் என்ற அளவில் 5 ஆண்டுகளுக்கான திட்டம் இது.

இந்தத்திட்டத்தில், தச்சர், பொற்கொல்லர், குயவர், சிற்பிகள், கல் தச்சர்கள், காலணி தைப்பவர், காலணி தொழிலாளர், காலணி செய்பவர், கொத்தனார், கூடை/ பாய்/ துடைப்பம் தயாரிப்பவர்/கயிறு செய்பவர், பாரம்பரியமாகப் பொம்மைகள் செய்பவர், முடி திருத்தும் தொழிலாளர், பூமாலை கட்டுபவர், சலவைத் தொழிலாளர், தையல்காரர், மீன்பிடி வலை தயாரிப்பவர், படகு தயாரிப்பவர், கவசம் தயாரிப்பவர், இரும்புக் கொல்லர், சுத்தியல் மற்றும் கருவிகள் செய்பவர்கள், பூட்டுகள் செய்பவர்கள் என 18 விதமான தொழில்களைச் செய்வோர் பயன் பெறலாம் என்றும் மத்திய அரசு தெரிவித்திருந்தது. கொடுமை என்னவெனில் கைவினைக் கலைஞர்களில் 5 கோடிக்கும் மேலான கைத்தறி நெசவாளர்கள் இடம் பெறாததுதான். இவர்கள் உற்பத்தி செய்த சேலைகள், வேட்டிகள் கொள்முதல் செய்யப்படாமல் நெசவாளர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாய்த் தொங்கிகொண்டிருக்கிறது என்பது ஒரு புறம்.

இந்தத் தருணத்தில் நாம் நினைவில்கொள்ள வேண்டியது 2015 இல் ஸ்கில் இந்தியா என்ற திட்டத்தை அறிவித்து, இதனால் 40 கோடி இந்தியர்கள் பயனடைவார்கள் எனச் சூளுரைத்தது மோடி அரசு. ஆனால், இந்தத் திட்டம் படுதோல்வியைச் சந்தித்தது. இந்தத் தேதி வரை இந்தத் திட்டத்தால் எத்தனை பேர் பயனடைந்தனர் என்ற விவரம் கூடச் சொல்லப்படவில்லை.

இந்நிலையில் பிரதமர் விஸ்வகர்மா யோஜனா என்ற திட்டம், சாதி அடிப்படையிலான தொழில் முறையை வலுப்படுத்தும் என்பதால் தற்போதைய வடிவில் அதனைச் செயல்படுத்திட இயலாது எனத் தமிழக முதல்வர் ஸ்டாலின் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

சாதி அடிப்படையில் பாகுபாடு காட்டாத கைவினைஞர்களை உள்ளடக்கி, மாநிலத்தில் உள்ள அனைத்துக் கைவினைஞர்களுக்கும் முழுமையான ஆதரவை அளிக்கும் வகையில் நிதியுதவி, பயிற்சி மற்றும் அவர்களின் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்தையும் உள்ளடக்கிய விரிவான திட்டம் தமிழ்நாடு அரசு அமல்படுத்தும் எனத் தமிழக முதல்வர் கூறியுள்ளது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

ஒன்றிய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தில் தமிழக அரசின் சார்பில் முன்வைக்கப்பட்ட 3 முக்கியத் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு, தமிழக அரசின் சார்பில் கடந்த 4.1.2024 அன்று தமிழக முதல்வரால் பிரதமருக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது. பின் 15.3.2024 அன்று நினைவூட்டுக் கடிதமும் அந்தத் துறை அமைச்சர் ஜிதன் ராம் மஞ்சிக்கு தமிழக அரசால் அனுப்பப்பட்டும் உள்ளது.

### திட்டத்தின் உள்நோக்கம் என்ன?

விஸ்வகர்மா என்ற இந்தத் திட்டம் புதிய திட்டமாஎனில் அதுவும்கிடையாது. முந்தைய காங். அரசுகள் 1950 ஆண்டிலிருந்து நிதி உதவி அளித்து அமல்படுத்தி வந்த திறன்மேம்பாட்டுக் கழகத்தின் திட்டங்கள் பல. அந்தத் திட்டங்களின் பயனாளிகள் சாதி மற்றும் குலத் தொழில் அப்பாற்பட்டு பயன் பெறும் வகையில் அமைந்திருந்தன. ஆனால் தற்போது வலுக்கட்டாயமாகச் சாதி அடிப்படையில் பரம்பரைக் குலத் தொழில் அடிப்படையில் பயனாளிகள் இருக்க வேண்டும் என்ற வகையில் தங்கள் வர்ணாசிரமக் கோட்பாடு அடிப்படையில் இந்த விஸ்வகர்ம திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

1950 ஆண்டில் அன்றைய முதலமைச்சராக இருந்த ராஜகோபாலாச்சாரியரால் கொண்டுவரப்பட்டு பின் பொதுமக்களின் குறிப்பாக இடதுசாரிகள் உள்ளிட்ட சமூக நீதிக்கட்சிகளின் கடும் எதிர்ப்பால் திரும்பப் பெறப் பட்ட ‘‘குலத்தொழில்’’ கல்வித் திட்டத்தின் தற்போதைய வடிவமே இந்தப் பிரதமரின் விஸ்வகர்ம திட்டம்.

தற்போதைய இந்தத் திட்டத்தின் மைய நோக்கம் என்னவெனில் பரம்பரைத் தொழில் செய்பவர்கள் அவர்கள் வாழ்நாள் முழுதும் அந்தத் தொழிலேயே செய்வதோடு அந்தத் தொழிலையே தனது வாரிசுகளையும் செய்ய நிர்ப்பந்திக்கும் தீய நோக்கிலானதுதான் இந்தப் பரம்பரைத் தொழில் செய்பவர்கள் திட்டம்.

அதாவது இந்தத் திட்டத்தின்படி கடன்பெறத் தகுதி என்னவெனில் பரம்பரை பரம்பரையாகக் குறிப்பிட்ட இந்தத் தொழிலைச் செய்தவர் எனச் சான்று பெறவேண்டுமாம். ஒரு வேளை அந்தக் குறிப்பிட்ட தொழிலைச் செய்பவர் தனது தொழிலை முன்னேற்றம் கண்ட வேறு ஒரு தொழில் செய்தாலோ அல்லது பொருளைத் தயாரித்தாலோ அவருக்குக் கடன் பெற உரிமை இல்லையாம். அதாவது சலவைத் தொழிலாளர். முடிதிருத்தபவர் கூடை, பாய், துடைப்பம் தயாரிப்பவர் இவர்கள் உள்ளிட்டு இந்தப் பட்டியிலில் குறிப்பிட்ட 18 தொழில்களைச் செய்வோர் வாழ்நாள் முழுதும் அந்தத் தொழிலைத் தவிர வேறு ஒரு மாற்றுத் தொழில் மேற்கொண்டு முன்னேற விடாமல் தடுக்கும் சட்டம்தான் இந்தத் திட்டம்.

அதுவும் இந்தத் திட்டத்தில் சேர வயது வரம்பு 18. அதாவது உயர்நிலைப் பள்ளி முடித்து, கல்லூரிப் படிப்பைத் தொடரும் கல்விக் காலம் அது.

முடிதிருத்துபவர், சலவைத் தொழிலாளர் உள்பட இந்த 18 வகை தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களது மாணவர்கள் தங்கள் விரும்பும் உயர்கல்வியில் சேரும் வயதுதான் 18. அந்த 18 வயதை இந்தத் திட்டத்தில் பயனடைய நிபந்தனையாக விதிப்பதிலிருந்து, அந்த 18 வகை தொழிலாளர் கைவினைஞர் குடும்பத்தினரை உயர் கல்வி பெறவிடாமல் தடுக்கும் தீய நோக்கிலான திட்டம்தானே இது.

உண்மையில் இந்த 18 வகை தொழில்களில் ஈடுபட்டுள்ளோரது குடும்பங்களை முன்னேற வேண்டும் என்பதில் அக்கறை இருக்குமேயானால் அரசு என்ன செய்திருக்க வேண்டும். மேற்படி குலத்தொழிலிருந்து விடுபட நினைக்கும் அந்தச் சாதி மக்களுக்கு அவர்களது பிள்ளைகளுக்கு மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட உயர் கல்வி தொடர்ந்திட உரிய ஒதுக்கீடும், வட்டியில்லாக் கடனாக கல்விக் கட்டணும் அரசே அல்லவா செலுத்திட வேண்டும்.

அதைவிடுத்து இந்தத் திட்டத்தில் சேர வலியுறுத்துவது சாதி அடிப்படையிலான குலத் தொழிலை நிலைநாட்டும் வருணாசிரமத்தின் தீய திட்டமேயோகும்.

கூட்டாட்சித் தத்துவத்திற்கு வேட்டு வைக்கும் வகையிலான மோடி அரசின் கடந்த கால திட்டமான உதய் மின் திட்டத்திற்கு அன்றைய முதல்வர் ஜெயலலிதா எதிர்த்து அவர் உயிரோடு இருக்கும் வரையில் அந்தத் திட்டத்திற்கு உடன்படவில்லை. ஆனால், பின்னால் வந்த எடப்பாடியார் தமிழக மக்கள் நலன் கருதாது அந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தன் தீய விளைவுகளை தமிழக மக்கள் சந்தித்து வருவதை அறிவோம். எனவே, மோடி அரசின் விஷமத்தனமான சாதி குலத்தொழில் விஸ்வகர்மத் திட்டம் தமிழகத்தில் நுழைய விடாது அனைத்துச் சக்திகளும் ஒருங்கிணைந்து போராட வேண்டியது காலத்தின் கட்டாயம்.

தொடர்புக்கு: 9443120051

## தமிழக அரசு பரிந்துரைந்த 3 முக்கியத் திருத்தங்கள்

1) விண்ணப்பதாரரின் குடும்பம், பாரம்பரியமாக குடும்ப அடிப்படையிலான வர்த்தகத்தில் ஈடுபட வேண்டிய கட்டாயத் தேவை நீக்கப்பட வேண்டும்; அதற்குப் பதிலாக, வழிகாட்டுதல்களில் பட்டியலிடப்பட்டுள்ள எந்தவொரு தொழிலையும் மேற்கொள்ள விரும்பும் எந்தவொரு நபரும் இந்தத் திட்டத்தின் கீழ் உதவி பெற தகுதியுடைவராக இருக்க வேண்டும்.

2) இந்தத் திட்டத்தில் பயன் பெறும் குறைந்தபட்ச வயது வரம்பை 35 ஆக உயர்த்த வேண்டும்.


3) கிராமப்புறங்களில் பயனாளிகளைச் சரி பார்க்கும் பொறுப்பு, கிராமப் பஞ்சாயத்துத் தலைவருக்குப் பதிலாக வருவாய்த் துறையைச் சேர்ந்த கிராம நிர்வாக அலுவலரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

ஆனால், மேற்கண்ட கடிதங்களுக்கு ஒன்றிய அரசு பதில் ஏதும் தெரிவிக்கவில்லை என்பதலிருந்தே மாநில அரசை எந்த அளவுக்கு மதிக்கிறது எனப் புரிந்து கொள்ளலாம்.

# திருப்பூர் காவல் துறையின் அத்துமீறலுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

அண்மையில் தமிழ்நாடு அரசின் நகராட்சி நிர்வாகத்தால் சொத்துவரி உயர்த்திய நடவடிக்கைக்கு வரி செலுத்துவோர் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்கள். மக்கள் உணர்வை அரசுக்குத் தெரிவித்து, வரி உயர்வை மறுபரிசீலனை செய்து, உயர்த்தப்பட்ட வரியை ரத்து செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை திருப்பூர் மாநகராட்சி மாமன்ற துணை மேயர் உட்பட மாமன்ற உறுப்பினர்கள் இன்று (28.11.2024) நடந்த மாமன்றக் கூட்டத்தில் முன்மொழிய, மன்ற விதிமுறைகளைப் பின்பற்றி உரிய முறைப்படி அணுகியுள்ளனர். ஆனால், மக்கள் உணர்வை வெளிப்படுத்தும் தீர்மானத்தை வணக்கத்திற்குரிய மேயரும், ஆணையர் உள்ளிட்ட அதிகாரிகளும் குறுக்கு வழியில் நிராகரித்து, மற்ற தீர்மானங்களை நிறைவேற்றினர். இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முறையில் துணை மேயர் உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள் மாநகராட்சிக்கு முன்பு, சாலையில் அமர்ந்து அமைதியான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாமன்ற உறுப்பினர்களை, காவல் துறை தலையிட்டுப் பலவந்தமாக அகற்றும் அத்துமீறலில் ஈடுபட்டுள்ளது. குறிப்பாக கட்சியின் மாநகர் மாவட்டச் செயலாளரும், மாமன்றக் குழுத் தலைவருமான எஸ்.ரவிச்சந்திரன் அவர்களது கைகளைப் பற்றி, இழுத்துத் தாக்கும் முயற்சியில் ஈடுபட்ட திருப்பூர் காவல் துறையின் அநாகரிகச் செயலை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், மக்கள் உணர்வுகளைப் பிரதிபலித்துச் செயல்படும் மக்கள் பிரதிநிதிகளான மாமன்ற உறுப்பினர்களிடம் தகாத முறையில் நடந்து கொண்ட காவல்துறை அதிகாரிகள் மீது சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

# தொடரும் தூய்மைப் பணியாளர்களின் அவல நிலை என்று மாறும்?




பொதுவாக மற்ற வேலை வாய்ப்புகளை அனைத்துப் பிரிவினரும் போட்டி போட்டுக் கொண்டிருக்கிற நிலைமையில் தூய்மைப் பணியாளர் பணி மட்டும் குறிப்பிட்ட அட்டவணை சாதியினரே தகுதியானவர்கள் என்று கருதும் நிலைப்பாடு எப்படி வந்தது? நாட்டைத் தூய்மையாக்கி, மக்களின் சுகாதாரத்தைக் காக்கும் தூய்மைப் பணியாளர்களின் வாழ்க்கை இந்த 21ம் நூற்றாண்டிலும் மேம்படவில்லை என்பது மட்டுமல்லாமல் இன்றும் அதல பாதாளத்தில் சென்று கொண்டிருப்பதுதான் வேதனை என்பதே மறைக்கவும் முடியாது!! மாற்றுக் கருத்து கூறவும் முடியாது!!! அவர்கள் சிந்தும் கண்ணீரைத் துடைப்பதற்கு இன்று வரை எந்த அரசும் முன்வரவில்லை தமிழ்நாடு முழுவதுமே தூய்மைப் பணியில் ஈடுபட்டிருக்கும் நிரந்தரப் பணியாளர்களை விட ஒப்பந்தப் பணியாளர்கள் அதிகம். நிரந்தரப் பணியாளர்களுக்கு பிஎப், ஓய்வூதியம், நிரந்தர வீடு போன்ற வாழ்வாதாரத்தில் பல பிரச்சனைகள் இருக்கின்றன. ஆனால், ஒப்பந்த மணியாளர்கள் பெரும் ஊதியம் மிகக் குறைவு என்பது தெரிந்தும் அரசு கண்டும் காணாமல் இருப்பது ஒரு பக்கம் இருந்தாலும் அந்த ஊதியத்தை இரண்டு முதல் ஆறு மாதங்கள் வரை தராமல் இழுத்தடிப்பதும், பிடித்தம் செய்து ஊழல் செய்கிற மேற்பார்வையாளர்கள் மற்றும் பி.எஃப், இ.எஸ்.ஐ காப்பீடு இல்லை. இன்னொரு பக்கக் கொடுமை!!!! அது மட்டும் அல்லாமல் சொந்த வீடு கூட இல்லை, தீபாவளி பொங்கல் போன்ற தங்கள் செய்யும் பணிக்கு போனஸ் என்று எதுவும் இல்லாமல் சம்பளத்தையே போராடிக் கேட்டுப் பெறவேண்டிய அவல நிலை உள்ளது. முக்கிய பிரமுகர் வந்தால் நேரம் பார்க்காமல் வேலையும் செய்ய வேண்டும். விடுமுறை இல்லாத வாழ்க்கை. மேலும் ஒப்பந்தப் பணியாளர்களுக்கு உடைகள், சோப்பு, கையுறை, பூட்ஸ், மலைக்கோட்டு, முகக் கவசம் தருவதும் இல்லை.

“வீசி எறிய நீங்கள் வந்து வார நாங்கள்” இருக்கிறோம் என்ற பரிதாபமான மனநிலையில் வாழ்வாதாரமே கேள்விக்குறியாக இருந்தும் தூய்மைப் பணியில் ஈடுபடும் ஒப்பந்தப் பணியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரசும், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**- கு. கபில்தேவ்**



டி.எம்.மூர்த்தி



**2012ல் அன்று குஜராத் முதல்வராக இருந்த மோடி ஒரு மேடையில் “ரூபாயின் மதிப்பு பலவீனமடைவது சர்வதேச வர்த்தகத்தில் இந்தியாவின் திறனை அபாயத்திற்கு உள்ளாக்கும். ரூபாய் இப்போது மருத்துவமனையின் ஐசியூ பிரிவில் உள்ளது” என்று எள்ளி நகையாடினார். அப்போது ஒரு டாலரின் மதிப்பு ரூ.53.06**

2013 ஆகஸ்ட் 20ல், “நாட்டின் பொருளாதாரம் பற்றியோ, ரூபாய் வீழ்ச்சியைப் பற்றியோ இந்த அரசு கவலைப்படவில்லை. தங்கள் நாற்காலியை காப்பாற்றுவது பற்றியே கவலைப்படுகிறார்கள். இந்தியா ஏமாற்றம் அடைந்து விட்டது” என்று தாளித்தார் மோடி. அப்போது.. 54.78 ரூபாய்க்கு ஒரு டாலர்.

மோடி பிரதமரான 2 ஆண்டுகளுக்குள் ரூ.35 க்கு ஒரு டாலர் என்று மதிப்பு உயர்ந்துவிடும் என்றார் சுப்ரமணியம்சாமி. ஆனால் மோடி பதவி ஏற்றதிலிருந்து டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு விழுந்து கொண்டே இருக்கிறது. சென்ற ஆண்டு 83 ரூபாய்க்கு ஒரு டாலர். இந்த ஆண்டில் இதுவரை இல்லாத படுபாதாளத்தில் ரூ.84.45க்கு ஒரு டாலர்.

நமக்கு அதிக டாலர் கிடைக்க வேண்டும் என்றால், நமது நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் வெளிநாடுகளில் விற்கப்பட்டு அதிக டாலரை நாம் ஈட்டியாக வேண்டும். ஆனால் நமது பொருட்களுக்கு அந்த நாடுகளில் உள்ள சந்தை நிலவரத்திற்கு ஏற்பத்தான் விலை கிடைக்கும்.

உதாரணமாக நாம் சர்க்கரை ஏற்றுமதி செய்கிறோம் என்றால், அந்த சர்க்கரைக்கு உள்நாட்டில் ஒரு விலை இருக்கும். ஆனால் வெளிநாட்டில் விற்கும் போது அந்த நாட்டின் சந்தைக்கு ஏற்ப விலை குறையவும் நேரிடும். அதற்காக நாம் ஏற்றுமதி செய்ய மாட்டோம் என்ற நிலையை எடுக்க முடியாது. ஏனென்றால் நமக்கு டாலர்கள் தேவை. நம்மிடம் டாலர் இருந்தால் தான் அதைக் கொண்டு வேறு நாடுகளில் இருந்து இங்கு பெட்ரோல் இறக்குமதி செய்ய முடியும்.

### வீழ்ச்சியின் விளைவுகள் என்ன?

இந்தியாவின் வெளிநாட்டு கடன் 642.8 பில்லியன் (64,280 கோடி) டாலராக இருக்கிறது.

சென்ற ஆண்டு ஒரு டாலருக்கு 83 ரூபாய் மதிப்பு என்று இருந்தபோது இந்த கடனின் ரூபாய் மதிப்பு ரூ.53,35,240 கோடி ஆகும். இந்த ஆண்டு ரூ 84.4 என்று சரிந்து விட்ட நிலையில், அதே டாலருக்கான அதே டாலர் கடனுக்கான ரூபாய் மதிப்பு இப்போது ரூ54,25,232 கோடி என்று உயர்ந்து விட்டது. புதிய கடன் ஏதும் வாங்காமல், உண்ணாமல் தின்னாமல் 89,992 கோடி ரூபாய் அசல் கடன் அதிகரித்து உள்ளது. ஏறுகிற வட்டி தனி கணக்கு.

ரூபாயின் மதிப்பு வலுவிழந்து வருவதால், கடன் எளிதில் கிடைப்பதில்லை. அதையும் தாண்டி வாங்கும்போது அந்நியச் செலாவணிக் கடனுக்கான வட்டி விகிதங்களை உயர்த்தி விடுகிறார்கள். இதனால் கடன்களுக்காக நமது நாடு செய்யும் செலவு அதிகரிக்கிறது.

கார்ப்பரேட் மற்றும் அரசுத் துறைகள் வாங்கியுள்ள வெளிநாட்டுக் கடன் சுமை கூடும் போது, ரூபாய் மதிப்பு மேலும் குறைந்து விடுகிறது.

நமது நாடு ஏற்றுமதி செய்யும் அளவைவிட இறக்குமதி செய்யும் பொருட்களின் விலை மதிப்பு அதிகம். இறக்குமதி பொருட்களின் டாலர் மதிப்பு மாறாமலிருந்தாலும், ரூபாய் மதிப்பு வீழ்ச்சியால் அதற்கு ஈடான ரூபாயின் அளவு அதிகரிக்கும்.

‘மேக் இன் இந்தியா’ போன்ற முன்முயற்சிகள் மூலம் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க முயற்சித்தாலும், மின்னணுவியல், இயந்திரங்கள் மற்றும் இரசாயனங்கள் போன்ற துறைகளுக்கு, இறக்குமதியை நம்பியிருப்பது குறிப்பிடத்தக்க அளவில் குறையவில்லை. நாம் ஏற்றுமதி செய்யும் சரக்குகளின் உற்பத்தி, ஏற்கனவே இறக்குமதியான பொருட்களை நம்பி இருப்பதால், இந்த ஏற்றுமதியின் மூலம் நமக்கு பெரிய லாபம் கிடைத்து விடுவதில்லை .

அத்துடன், ஏற்றுமதியும் குறைந்து வருகிறது, மேலும் அன்னிய நேரடி முதலீடு (FDI) வரத்தும் தணிந்துள்ளது.


இந்தியா போன்ற இறக்குமதியை சார்ந்து இருக்கும் ஒரு நாட்டிற்கு, ரூபாய் மதிப்பு குறைவது இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விலைமதிப்பை கூடுதலாக்குகிறது.

இந்தியாவுக்கு தேவைப்படும் கச்சா எண்ணெயில் 87% இறக்குமதி செய்யப்படுகிறது. இதற்காக சென்ற ஆண்டு இந்தியா 134 பில்லியன் (13,400 கோடி) டாலர் செலவிட்டது. மதிப்பு வீழ்ச்சியால் இறக்குமதி செய்யப்படும் அதே அளவு எண்ணெய்க்கு 18,760 கோடி ரூபாய் அதிகம் தர வேண்டும்.

கச்சா எண்ணெயில் இருந்து தான், விமான எரிபொருள், பெட்ரோல், டீசல், உரங்கள், பிளாஸ்டிக் ஆகியவை கிடைக்கின்றன. கச்சா எண்ணெய்க்குச் செலவழிக்கும் தொகை அதிகரித்தால் இவற்றின் விலை உள்நாட்டில் ஏறும்.

**கடந்த 10 ஆண்டுகளில் ஒரு டாலருக்கு இணையான ரூபாய் மதிப்பு**

| | |
|---|---|
| 2014 | 62.33 |
| 2015 | 62.97 |
| 2016 | 66.46 |
| 2017 | 67.79 |
| 2018 | 70.09 |
| 2019 | 70.39 |
| 2020 | 76.38 |
| 2021 | 74.57 |
| 2022 | 81.35 |
| 2023 | 81.94 |
| 2024 | 83.47 |




### இந்தியாவை இது ...

உள்நாட்டில் ஏற்படும் பண வீக்கத்தை கட்டுப்படுத்த, வங்கிகளில் பொதுமக்கள் டெபாசிட் செய்து இருக்கிற தொகைகளுக்கான வட்டியை ரிசர்வ் வங்கி குறைக்கிறது. அதே நேரத்தில் வங்கிகள் வழங்கும் கடன்களுக்கான வட்டியை கூட்டுகிறது.

ரூபாய் மதிப்பு தொடர்ந்து சரிந்து வருவதை ஈடுகட்ட, ரிசர்வ் வங்கி கையிருப்பு வைத்துள்ள டாலர்களை விற்கிறது. அதன் மூலம் சந்தையில் கிடைக்கும் டாலர்களின் அளவை அதிகரித்து, அதனால் ரூபாயின் மதிப்பை உயர்த்துவதற்கான நடவடிக்கை இது.

ஆனால் ஏற்கனவே வர்த்தக சமன்பாட்டில்

### ஏற்றுமதியும் உதவவில்லை

மேலே உள்ள கணக்குகளில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் யாவும், சென்ற ஆண்டுக்கும் இந்த ஆண்டுக்கும் இடையில் டாலரின் விலை ரூ 1.40 உயர்ந்ததால் ஏற்பட்ட அதிகரிப்பு மட்டுமே. ஐமுகூ ஆட்சியின் போது டாலரின் விலை 64 ரூபாய் தான். இப்போது 20 ரூபாய் அதிகம். இதைக் கொண்டு கணக்கிட்டால், அதிகரித்துள்ள செலவினத்தின் அளவு தலையை கிறுகிறுக்க செய்யும்.

இறக்குமதியை மட்டுமே கணக்கிட்டு பார்க்காமல், ஏற்றுமதியையும் சேர்த்துதானே பார்க்க வேண்டும்.


# ப் மதிப்பு வீழ்ச்சி
# ஏற்படுத்தும் பாதிப்புகள்

ஏற்றுமதி மூலம் நமக்கு கூடுதல் வருவாய் கிடைக்கும் தானே என்று நியாயமான கேள்வி இங்கு எழும்.

ஐ.டி. என்று சொல்லப்படும் தகவல் தொடர்புத் துறை வேகமாக வளர்ந்து வருகிறது. அயல் நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு நாம் இங்கே வேலை பார்ப்பதால், அதன் மூலம் நமக்கு கிடைக்கும் டாலர் அதிகமாகும் என்பது உண்மையே. அதேபோல டாலர் சிட்டி என்று சொல்லப்படும் திருப்பூரில் இருந்து ஆயத்த ஆடைகள் ஏற்றுமதி ஆகின்றன.

ரூபாய் மதிப்பு வீழ்ச்சி காரணமாக, நாம் ஏற்றுமதி செய்யும் பொருட்களின் விலையை நம்மால்

## நோக்கிய பயணம்




## மலும் கீழே தள்ளும்

பின்தங்கி இருக்கும் இந்தியாவின் டாலர் கையிருப்பை இது 'காலி' செய்துவிடும். சர்வதேச நிதியத்தில் கடன் வாங்கும் நிலைக்கு தள்ளும்.

ஒரு வகையில் தீர்வு காண முயற்சித்தால், அது இன்னொரு சிக்கலை கொண்டு வருகிறது.

சேற்றில் மாட்டிக்கொண்ட கொக்கு, ஒரு காலை அழுத்தி இன்னொரு காலை விடுவிக்கிறது. இப்போது மற்றொரு கால் மாட்டிக்கொண்டது. பிறகு மூக்கை மூக்கை சேற்றுக்குள் அழுத்தி, மாட்டிக்கொண்ட காலை விடுவிக்கிறது. ஆனால் இப்போது மூக்கு மாட்டிக் கொண்டது. முதலாளித்துவத்தின் தீர்க்க முடியாத நெருக்கடி இது.

நிச்சயிக்க முடியாத நிலை நிலவுகிறது. ஆயத்த ஆடைகளை நாம் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்த காலம் போய், வெளிநாட்டு கார்ப்பரேட்டுகள், நமது உற்பத்தியாளர்களை துணை நிறுவனங்கள் ஆக்கிவிட்ட கொடுமை நிகழ்ந்து கொண்டிருக்கிறது. துணியிலிருந்து நூல் வரை அவர்கள் சப்ளை செய்ய, அதை ஆடையாக மாற்றம் (கன்வர்ஷன்) செய்து கொடுப்பவையாக நமது நிறுவனங்களின் ஆளுமையை சுருக்கி விட்டார்கள்.

இறக்குமதி நமக்கு தவிர்க்க முடியாத தேவையாகிறது. அதில் நமது விருப்பங்களுக்கு முன்னுரிமை இல்லை. அதே நேரத்தில் ஏற்றுமதி, நம்மிடமிருந்து வாங்குபவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப அமைகிறது. வாங்குபவர்கள் மிகப்பெரும் சக்தி வாய்ந்த மூலதனத்தைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். எனவே ஏற்றுமதியும் இறக்குமதியும் சம பலத்தில் நிகழ்வதில்லை.

## டாலரின் விலை எப்படி நிர்ணயிக்கப்பட்டுள்ளது?

ஒரு காலத்தில் தங்கமும் வெள்ளியுமே பணமாக பயன்படுத்தப்பட்டன. பின்னர் காகித நோட்டுகள் புழக்கத்துக்கு வந்த போது, ஒரு நாட்டின் அரசு இருப்பு வைத்துள்ள தங்கத்தின் அளவைப் பொறுத்து அந்தக் காகிதத் தாளின் மதிப்பு நிர்ணயமானது. முதலாம் உலகப் போர் வரை, இங்கிலாந்தின் பவுண்டு நோட்டு தான் சர்வதேச அளவில் பயன்படுத்தப்பட்டது. அதற்குப் பின் அமெரிக்காவின் டாலர் உலகச் சந்தையை ஆக்கிரமித்தது.

இந்தியா விடுதலை அடைந்தபோது ஒரு டாலருக்கு ஒரு ரூபாய் என்று மதிப்பு இருந்தது. இந்தியா ஒரு நிலையான மாற்று விகித முறையைப் பயன்படுத்தி வந்தது. ரூபாய் மதிப்பு விகிதத்தை அரசுதான் நிர்ணயம் செய்தது.

நரசிம்மராவ் காலத்தில் புதிய பொருளாதாரக் கொள்கை அமல் நடத்தப்பட்ட பின்பு 1993ல் தாராளமயமாக்கப்பட்ட மாற்று விகித மேலாண்மை (எல்இஆர்எம்எஸ்) எனும் முறை கொண்டுவரப்பட்டது. பெயர் தான் பெரிதாக இருக்கிறதே தவிர, ரூபாயின் மதிப்பை, சூழ்ச்சி மிகுந்த சந்தை நிர்ணயிக்கட்டும் என்று கை கழுவிய முறையே அது.

எளிதாக சொல்வதென்றால், அந்தப் பகுதி மக்களுக்கு தேவைப்படும் தக்காளியின் அளவைவிட அதிகமான தக்காளி சந்தைக்கு வந்தால் அதன் விலை கிலோ 50 பைசாவாக இருக்கும். தேவையை விட குறைவாக வந்தால் அதன் விலை 100 ரூபாயைக் கூட எட்டும்.

அதுபோலவே உலகச் சந்தையில் டாலர் எளிதாகக் கிடைத்தால், ரூபாயின் மதிப்பு ஏறும். டாலர் கிடைப்பது கடினமாக இருந்தால் ரூபாய் மதிப்பு குறையும்.

### விழுங்குகிற கடன்கள்

அரசு வாங்கும் கடன் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. மோடி பதவியேற்கும் வரை, விடுதலை கிடைத்த பின் 67 ஆண்டுகளாக இந்தியாவுக்கு இருந்த கடன் 53 லட்சம் கோடி ரூபாய். மோடியின் பத்தாண்டு ஆட்சி காலத்தில் 120 லட்சம் கோடி ரூபாய் அதிகரித்து 173 லட்சம் கோடியாக மாறி இருக்கிறது. எனவே புதிய கடன் பெறுவோர் வெளிநாட்டு கடன்களை சார்ந்து இருக்க வேண்டிய சூழல் ஏற்படுத்தப்பட்டு விட்டது.

சர்வதேச நிதி மூலதனத்தின் உத்தரவுக்கு அடிபணிந்து, உள்நாட்டு உற்பத்திகளை பாதுகாக்க தவறி, சொந்த நாட்டின் சந்தையை அந்நிய கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு திறந்துவிட்டு, அதானி, அம்பானி போன்றவர்களின் நிதி முறைகேடுகளுக்கு எல்லாம் தோள் கொடுத்து பாதுகாத்து, சாமானிய மக்களின் தலை மீது ஜி எஸ் டி என்ற பெயரில் தலையில் ஒரு சுமையை ஏற்றி, இதையெல்லாம் மறைக்க இந்தியா ஐந்தாவது பெரிய பொருளாதார நாடு என்று மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கும் மோடியும், அவரது பொருளாதார ஆலோசகர்களும் தான் இன்றைய மிகப்பெரிய குற்றவாளிகள்.

பிரிட்டிஷ் ஆட்சி 'பொழுதெல்லாம் செல்வம் கொள்ளை கொண்டு போன' பின்பு, வறுமையின் அடித்தளத்தில் உழன்ற இந்தியா, உணவு உற்பத்தி, மின்சாரம், கனரகத் தொழில்கள் போன்றவற்றை உருவாக்கி, வலிமைப்படுத்தி தன் காலில் நின்று சுயசார்பை வளர்த்துக் கொண்டிருந்தது. அதனை சர்வதேச நிதி மூலதனத்துடன் பிணைத்து, தரதரவென்று இழுத்துச் செல்லப்படும் நிலையை மோடி அரசு உருவாக்கி விட்டது.

இந்த நெருக்கடிதான், நமது பக்கத்து நாடுகளான இலங்கையிலும் வங்கதேசத்திலும் பேரழிவை ஏற்படுத்தின. கடைசியில் மக்கள் கிளர்ந்து எழுந்தார்கள். அவ்வளவு மோசமான பொருளாதார நிலைக்கு இந்தியா சென்று விடாமல் தடுக்க, மக்களிடம் விவரங்களை எடுத்துச் செல்ல வேண்டியது நமது கடமை ஆகிறது.

தொடர்புக்கு: 7397130367

## உருகுவே நாட்டில் இடதுசாரிகள் வெற்றி



உருகுவேயின் புதிய ஜனாதிபதியாகப் பல்வேறு இடதுசாரிக் கட்சிகள் அடங்கிய "விரிவான கூட்டணி"யின் வேட்பாளரான யாமண்டு ஓர்சி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அவருடன் இணைந்து போட்டியிட்ட கரோலினா கோஸி துணை ஜனாதிபதியாகத் தேர்வாகியுள்ளார்.

### இரண்டாவது சுற்றில் வெற்றி

உருகுவேயின் புதிய ஜனாதிபதியைத் தேர்வு செய்வதற்கான முதல் சுற்றுத் தேர்தலில் யாருக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதனால் முதலிரண்டு இடங்களைப் பெற்ற இடதுசாரிக்

கூட்டணியின் வேட்பாளரான யாமண்டு ஓர்சி மற்றும் அதிதீவிரவலதுசாரிக் கட்சிகளின் வேட்பாளரான அல்வரோ டெல்கடோ ஆகிய இருவரும் இரண்டாவது சுற்றில் போட்டியிட்டனர்.

கடந்த தேர்தலைப் போலவே முதல் சுற்றில் வெற்றி பெற்றாலும், இரண்டாவது சுற்றில் வலதுசாரி வாக்குகள் ஒருங்கிணைக்கப்பட்டு இடதுசாரி வேட்பாளர் தோல்வியடைவார் என்று கருத்துக் கணிப்புகள் வெளியாகின. ஆனால், 49.85 விழுக்காடு வாக்குகளைப் பெற்று ஓர்சி வெற்றி பெற்றுள்ளார். எதிர்த்துப் போட்டியிட்ட டெல்க டோவுக்கு 45.86 விழுக்காடு வாக்குகள் கிடைத்தன.

### 2 அவைகளிலும் கூடுதல் இடம்

கடந்த ஐந்து ஆண்டுகளில் பெருமுதலாளிகளின் நலன்களுக்கான கொள்கைகளை மட்டுமே நடைமுறைப்படுத்துவதில் ஆளும் வலதுசாரிக் கூட்டணி கவனம் செலுத்தியது. அதற்கு முந்தைய காலகட்டத்தில் ஆட்சியில் இருந்த இடதுசாரிக் கூட்டணி நடைமுறைப்படுத்திய நலத்திட்டங்கள் அனைத்தையும் சீர்குலைக்கவும் செய்தது.

இதனால், கடும் அதிருப்தியில் இருந்த உருகுவே மக்கள், அமெரிக்க ஆதரவு நிலையை எடுத்த ஆளும் வலதுசாரிக் கூட்ட ணியைத் தேர்தலில் தோற்கடித்துள்ளனர். நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் கூட இடதுசாரிக் கூட்டணியே அதிக இடங்களைப் பெற்றுள்ளது.

### பொதுத்துறை மீட்புக்கு மக்கள் ஆதரவு

இதனிடையே, மக்களில் குறிப்பிட்ட பகுதியினர் வைத்துள்ள மாற்றுக் கருத்துக்களும் கூட அரசின் கொள்கைகளில் இணைக்கப்படும் என்றும் ஓர்சி தெரிவித்துள்ளார்.

இடதுசாரிக் கூட்டணி மக்களுக்கு அளித்த முக்கியமான வாக்குறுதி, பொதுத்துறையை மீட்பது ஆகும். முந்தைய ஆட்சியாளர்களின் நவீனத் தாராளமய முன்மொழிவுகளால் பொதுத்துறை சீரழிக்கப்பட்டு, பெரும் நெருக்கடியில் தள்ளப்பட்டது. அதனை மீட்டெடுப்போம் என்ற இடதுசாரிக் கூட்டணியின் பிரச்சாரம் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. அதுவே தற்போது தேர்தல் முடிவுகளிலும் எதிரொலித்துள்ளது. உருகுவே ஜனாதிபதியாக இடது சாரிக் கூட்டணி தலைவர் ஓர்சி, 2025 மார்ச் 1 அன்று பொறுப்பேற்க உள்ளார்.

### மீண்டும் நிலைநிறுத்தப்பட்ட லத்தீன் அமெரிக்கப் பாரம்பரியம்

அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ள தற்போதைய ஜனாதிபதி லூயிஸ் லகால்லே போ, "எப்போது வேண்டுமானாலும் ஆட்சி மாற்றத்திற்குத் தயாராக இருக்கிறேன். ஜனாதிபதியாகத் தேர்வாகியுள்ள ஓர்சிக்கு எனது வாழ்த்துகள்" என்று குறிப்பிட்டுள்ளார். கியூபா ஜனாதிபதி மிகுவேர் டியாஸ்கானல், பிரேசில் ஜனாதிபதி லூலா, ஹோண்டுரஸ் ஜனாதிபதி சியாமாரோ காஸ்ட்ரோ, மெக்சிகோ ஜனாதிபதி கிளாடியா ஷெய்ன்பாம், வெனிசுலா ஜனாதிபதி நிகோலஸ் மதுரோ ஆகியோரும், ஓர்சிக்குத் தங்களின் பாராட்டுதல்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளனர்.

தங்கள் வாழ்த்துச் செய்தியில், "இடதுசாரிப் பாதையில் நடைபோடும் லத்தீன் அமெரிக்கப் பாரம்பரியத்தை மக்கள் மீண்டும் நிலைநிறுத்தியிருக்கிறார்கள். நாடுகளின் மத்தியில் கூடுதல் ஒருங்கிணைப்பை ஏற்படுத்த உருகுவே தேர்தல் வெற்றி பயன்படும்" என்றும் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

லத்தீன் அமெரிக்காவில் வலதுசாரிக் கொள்கைகளைக் கடைப்பிடித்த அரசுகளை ஒவ்வொன்றாக மக்கள் தூக்கியெறிந்து வருகின்றனர். அதில் தற்போது உருகுவேயில் இணைந்துள்ளது.



# ஃப்ரடெரிக் ஏங்கெல்ஸ் மாபெரும் இயற்கையியலாளர்

**- டாக்டர் யுகல் ராயலு**

நமது உலகைப் புரிந்து கொள்வதில் எண்ணிறைந்த விஞ்ஞானிகள் முறையான வழியில் தீவிரமாகப் பாடுபட்ட முயற்சிகளின் பலனாகப் பெற்ற அறிவைச் சாதாரண மக்களுக்கு எடுத்துச் சென்ற காரணத்தால்தான் மனித சமுதாயம் இவ்வளவு தொலைவு முன்னேறி வந்துள்ளது.

'நெருப்பை' மூட்டும் இரகசியத்தைக் கண்டறிந்த முதலாவது அறிவார்ந்த மனிதன் முதலாக, தற்போது நவீன விண்வெளி விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு காரணமாக பேரறிவு மனித உயிரினமாக அதாவது பூமியின் மிக முன்னேறிய உயிரினமாக மாற்றியது.

மார்க்சும் ஏங்கெல்சும் 1948ல் 'கம்யூனிஸ்ட் அறிக்கை'யை எழுதியபோது, அவர்கள் வரலாற்றின் சமூகபொருளாதார மாற்று மாதிரிக்கான பாதையை அமைத்தனர். அதன் பின் ஒரு நூற்றாண்டிற்குள் சோஷலிசப் புரட்சி நடந்தது; சமதர்ம அரசு என்ற கருத்தியல் உலகளாவிய கருத்தானது; மேலும், சோஷலிசத்தின் மூர்க்கமான எதிரிகளும் இக்கருத்துகளை அமலாக்கத் தொடங்கினர், அவர்கள் நோக்கம் புரட்சியைத் தள்ளி வைத்துத் தடுத்து நிறுத்துவதே! மார்க்ஸியம் சக்திவாய்ந்த கருத்தானது.

மார்க்ஸியம் என்ற தத்துவம், 20ம் நூற்றாண்டின் ஆகச் சிறந்த சிந்தனையாளர் காரல் மார்க்ஸ் பெயரில் அழைக்கப்பட்டாலும், அந்தக் கருத்தியல் வெளி, ஃபெடரிக் ஏங்கெல்சின் கருத்துக்களையும் உள்ளடக்கியது. இந்த இரு மேதைகளும் பிரிக்க முடியாதவர்கள். 1820 நவம்பர் 28ல் பிறந்த ஃபெடரிக் ஏங்கெல்ஸ், ஒரு ஜெர்மன் தத்துவவாதி, அரசியல் கோட்பாளர், வரலாற்றாளர், பத்திரிக்கையாளர் மற்றும் ஜெர்மன் சோஷலிச ஜனநாயக இயக்கத்தின் புரட்சிகரத் தலைவருமாவார். இயற்கை அறிவியல் குறித்து அவர் ஏராளமாக எழுதிக் குவித்துள்ளார். அதில் அவருடைய முக்கிய படைப்பு 'இயற்கையின் இயங்கியல்' என்ற தலைப்பில் அமைந்தது.

'இயற்கையின் இயங்கியலுக்கு ஓர் அறிமுகம்'எழுதினார் ஏங்கெல்ஸ். "இதுவரை மனிதகுலம் அனுபவித்தவை மிக பிரம்மாண்ட முற்போக்குப் புரட்சிஞ் அப்போது வாழ்ந்த முக்கியத்துவமுள்ள மனிதர்களில் வெகு சிலரே விரிந்த பல பயணங்களை மேற்கொண்டு, நான்கு அல்லது ஐந்து மொழிகளில் ஆளுமை பெற்று, பற்பல துறைகளில் சிறந்து விளங்கி இருப்பார்கள்." அந்த அறிவியலாளர்கள் அனைவரையும் ஏங்கெல்ஸ் மதித்து ஏற்கிறார்.

ஏங்கெல்ஸ் அறிவியல் மனப்பான்மையைத் தீவிரமாக ஆதரிக்கிறார். ஏதார்த்த நிகழ் உலகுடன் தொடர்பில் இருப்பது முக்கியம் எங்கிறார். "அந்தக் காலகட்டத் தத்துவத்தின் உயர்ந்த பெருமை யாதெனின், அது சமகாலத்திய வரையறுக்கப்பட்ட இயற்கை அறிவு நிலையைக் கொண்டு, அதனால் தன்னைத் திசை மாறிச் செல்ல அனுமதிக்காததே ஆகும். உலகத்தை விளக்குவதை மற்றும், அந்த விளக்கத்தை நியாயப்படுத்தும் கூடுதல் விவரங்களை எதிர்கால இயற்கை அறிவியலிடம் விட்டுவிட வேண்டும்" என்றும் எழுதுகிறார்.

எந்த ஒரு விஞ்ஞானியும் தனித்துப் பணியாற்றவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டும். விஞ்ஞானிகள் இடையே கருத்துகள் பறிமாற்றம் புதிய அறிவியல் வெளிகளை நன்கு புரிந்து கொள்வதில் உதவுகிறது. ஒரு குழு விஞ்ஞானிகள் பிற குழுக்களைவிட மேன்மை மிக்கது எனச் சிலர் தேவையில்லாமல் பேசுகிறார்கள். ஆனால் விஞ்ஞானம் இணைந்து முன்னேறுகிறது. ஒரு தலைமுறை கற்றறிந்து கைவரப்பெற்ற அறிவு, அடுத்த தலைமுறைக்குக் கைமாற்றி வழங்கப்பட்டு வருகிறது. யாரும் முன்பே திட்டமிடப்பட்டு கட்டமைக்கப்பட்ட மூளையுடன் ஒருபோதும் பிறந்ததில்லை.



மனிதன், மனிதக் குரங்கிலிருந்து வேறுபட்டு வளர்ச்சி அடைந்தது குறித்து ஏங்கெல்ஸ் எழுதினார்: "மனிதனும்கூட மாறுபாடு அடைதல் மூலமே தோன்றினான். தனிநபராக மட்டும் இல்லாமல், ஒற்றைச் செல் கருமுட்டையிலிருந்து மாறுபாடு அடைந்து, இயற்கை உருவாக்கிய மிகவும் சிக்கலான உயிரினமாக உருவானான். காலில் இருந்து கைக்கு மாறுவது மற்றும் நிமிர்ந்து நின்று நடத்தலுக்கு மாறுவது என்ற மாறுபாடு அடைதல் போராட்டத்தின் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்னர், மனிதக் குரங்கிலிருந்து மனிதனாகத் தனித்துவமான மாற்றம் இறுதியில் நிறுவப்பட்டது.

தெளிவான பேச்சு, மூளையின் வலிமை மிக்க வளர்ச்சிக்கான அடித்தளம் அமைக்கப்பட, அந்த நாள் தொடங்கி மனிதனுக்கும் மனிதக் குரங்குக்கும் இடையோன பெரும் இடைவெளி குறைக்கப்படவோ இணைக்கவோ முடியாததாயிற்று. கைகளின் சிறப்புப் பயிற்சி,இது கருவியைஒத்து சுட்டிக்காட்டத் தக்கது, மற்றும் கருவியானது குறிப்பாக மனிதச் செயல்பாட்டையும், இயற்கை மீது மனிதனின் மாற்றியமைக்கும் எதிர்வினை ஆற்றலையும் மற்றும் உற்பத்தியையும் சுட்டிக் காட்டும்."

ஒருபொருள்முதல்வாதியாகஏங்கெல்ஸ் எப்போதும் தனது எழுத்தாக்கங்களை இயற்கை மற்றும் வரலாற்றின் பௌதீக சாட்சியம் அடிப்படையில் அமைப்பார். ஏங்கெல்ஸ்தான் நமக்கு மனிதகுலச் சமூகத்தின் சமூகப் பயணம் குறித்து விளக்கினார்.

"குடும்பம், தனிச் சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம்" என்ற அவரது நூலில், ஏங்கெல்ஸ், மனிதகுலத்தை அடிமைச் சமூகம் என்ற கட்டத்திலிருந்து, உற்பத்தி உறவின் பல்வேறு கட்டங்கள் மூலம் முதலாளித்துவக் கட்டம்வரை உந்தித்தள்ளிய பௌதீக நிலைமைகளை விளக்கினார்.

இந்த மாற்றங்களில் தெய்வீகத் தலையீடு எதையும் அவர் தீர்மானகரமாக விலக்கினார். உண்மையில் மனித சமூகத்தின் இந்தப் பயணத்தை அதனுள் இருந்தே விளக்கிட அவர் முயற்சி செய்தார்.

இலக்கியத்தில் சமூக நிலைகளின் சித்தரிப்பைப் பாராட்டும் ஏங்கெல்ஸ், ஓர் உற்பத்தி உறவின் சமூகக் கட்டம் மற்றும் அடுத்த கட்டம் இவற்றின் இடையிலான பல்வேறு புள்ளிகளை ஏங்கெல்ஸ் மிக அழகாகத் தொடர்புபடுத்தி சித்திரக் கோலமாக்குகிறார். ஏங்கெல்சின் கூற்றுப்படி புராணங்களும்கூட இந்த வளர்ச்சிக் கட்டங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்கின்றன.

பழைய முறைகள் எவருடைய நோக்கமும் இன்றி மறைந்து போவது குறித்து ஏங்கெல்ஸ் எழுதினார்: "இந்தியாவில் இருந்தவர்கள் விலங்குகளைப் பழக்கி, வீட்டு விலங்குகளாக்கி, கட்டுப்படுத்தப்பட்ட சூழல்களில் விலங்குகளையும் பயிர்களையும் இனப் பெருக்கம் செய்து உற்பத்தி பெருக்கி, அதுவரை அறியாத செல்வாதார ஊற்றை மேம்படுத்தினர்.

மார்க்ஸியர்கள் இந்தியாவில் பிரச்சனைகளையும் நிலைகளையும் விவாதிப்பதில்லை என இந்தியாவில் தவறாகக் கூறுகின்றனர். சிந்து நதியின் நிலத்தின் மாறிவந்த உற்பத்தி உறவுகளை ஆழ்ந்து பரிசீலித்து எங்கெல்ஸ் எழுதியுள்ளார். இந்தக் காலகட்டத்தில்தான் கால்நடைகளை மேய்த்து வாழும் ஆயர் வாழ்க்கை முறை, ஐந்து நதிகள் ஒன்று கலந்து பாயும் பஞ்சாப் மண்ணின் வாழ்வியலாயிற்று. இதில் அவரது வாதம், புதிய உற்பத்தி உறவு பயன்பாட்டிற்கு வந்து, காலத்தின் சோதனையைக் கடந்து நிற்கும்போது, அதற்கு முந்தைய அனைத்து உற்பத்தி உறவுகளும் மங்கி மறைகின்றன என்பதே. இதை ஆராய்வதற்கு ஏங்கெல்ஸ் அறிவியல் முறைகளை மட்டுமே ஏற்றார்.

பெரும் விஞ்ஞானிகள் அனைவருக்கும் ஓர் உலகப் பார்வை உண்டு. அவர்கள் எப்போதும் மனிதகுலவளர்ச்சிமற்றும் முன்னேற்றத்திற்காகப் பணியாற்றி வருகின்றனர். மனிதச் சமூகம் மற்றும் மனிதச் சமுதாயத்தை ஏற்படுத்திய சுற்றுச்சூழலுக்கு இடையே உள்ள உறவை ஏங்கெல்ஸ் விளக்குகிறார். அறிவுத் திறனுடன் அவர் வெளிக் கொணர்ந்த ஓர் உண்மை, இறுதியில் மனிதனும் இயற்கையின் உற்பத்தியே தவிர, வேறு எதுவும் அல்ல. வாழ்வு குறித்த அனைத்து நவீனப் புரிதல்களும் இந்த முக்கியமான உண்மையை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

நாம் அனைவரும் அதே கற்றல் பெரும்பயணத்தின் மூலம் வந்தவர்கள் என நமக்குப் புரிய வைத்ததற்காகவும், இயற்கையே எல்லா வகை உயிர்களுக்கும் இறுதியில் ஆதார ஊற்று எனப் புரிய வைத்ததற்காகவும் மாபெரும் இயற்கையியலாளர், ஃபெடரிக் ஏங்கெல்ஸ்.

**தமிழில் : நீலகண்டன்**


**தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம்**

**மாநிலப் பேரவைக் கூட்டம்**

நாள்: **13.12.2024**
**காலை 10 மணி**

இடம்: **சிபிஐ அலுவலகம்**
கீழ ராஜ வீதி,
தஞ்சாவூர் அரண்மனை எதிரில்

தலைமை : **இரா.நல்லகண்ணு**

பங்கேற்போர்:

**இரா.முத்தரசன்** சி.பி.ஐ. மாநிலச் செயலாளர்
புதுவை **அ.ராமமூர்த்தி** தேசியத் தலைவர் AIDRM.
**மு.வீரபாண்டியன்** மாநிலப் பொதுச் செயலாளர் த.ஒ.அ. இயக்கம்
**பொ.லிங்கம்** Ex MP. தேசியத் துணைத் தலைவர் AIDRM.

மாவட்ட தலைவர், செயலாளர், பொருளாளர், துணைத் தலைவர்கள், துணைச் செயலாளர்கள் என மாவட்டத்தின் முன்னணி நிர்வாகிகள் அவசியம் பங்கேற்கவும்

### கனமழையால் பாதிக்கபட்ட பகுதிகளை
## வை.செல்வராஜ் எம்பி ஆய்வு செய்தார்



நாகை மாவட்டம் தலைஞாயிறு ஒன்றியத்தில் கனமழையால் பாதிக்கபட்ட பகுதிகளை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ் ஆய்வு மேற்கொண்டார். உடன் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நாகை மாவட்டச் செயலாளர் சிவகுரு பாண்டியன் மற்றும் நிர்வாகிகள், மக்கள் பிரதிநிதிகள், அதிகாரிகள் உள்ளிட்டோர்.

## ஏனங்குடி சௌரிராஜன் 40 ஆம் ஆண்டு நினைவு



பொதுவுடைமைப் போராளி ஏனங்குடி சௌரிராஜன் 40 ஆம் ஆண்டு நினைவு நாள் கூட்டம் நடைபெற்றது. இதில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் ஜி.பழனிசாமி எக்ஸ் எம்எல்ஏ, நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், நாகை மாவட்டச் செயலாளர் சிவகுருபாண்டியன் மற்றும் ஆர்.கே.பாபுஜி, சு.பாலசுப்ரமணியன், மாரி கார்த்திகேசன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு புகழஞ்சலி செலுத்தினர்.

### மழையால் பாதிக்கப்பட்ட
## பயிர்களுக்கு இழப்பீடு கோரி வேளாண் அமைச்சரிடம் கோரிக்கை



தஞ்சாவூர் மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் கனமழையால் பல்வேறு இடங்களில் நெற்பயிர்கள் நீரில் மூழ்கி அழுகும் நிலையில் உள்ளது. அம்மாபேட்டை உக்கடைப் பகுதிக்கு வேளாண்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன், மாவட்ட ஆட்சியர் பிரியங்கா பங்கஜம் ஆகியோர் நேரில் ஆய்வு செய்தனர். அப்போது தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பாக, மாவட்டத் துணைச் செயலாளர் ஆர்.செந்தில்குமார் வேளாண் துறை அமைச்சரிடம் பாதிப்புகள் குறித்து தெரிவித்தார். வடிகால்களைத் தூர்வார வேண்டும், பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு ஏக்கருக்கு 30,000 இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தார். கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் என்று வேளாண் துறை அமைச்சர் தெரிவித்தார், உடன் கட்சியின் அம்மாபேட்டை ஒன்றியச் செயலாளர் எம்.வெங்கடேசன் உள்ளிட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

## நெல்லை அம்பாசமுத்திரம் விவசாயச் சங்கப் பேரவைக் கூட்டம்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கப் பேரவைக் கூட்டம், அம்பை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் எஸ்.வி.கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. அம்பைசேரை விவசாயச் சங்கத் தலைவராக எஸ். சுப்பிரமணியன், செயலாளராக வி.நமச்சிவாயம், பொருளாளராக ஏ.அனை வீரகண்ணு ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்ட விவசாயச் சங்க கன்வீனர் களக்காடு கே.முருகன், மாவட்ட துணைச் செயலாளர் கே. முத்துகிருஷ்ணன், அம்பைசேரை ஒன்றியச் செயலாளர் பி.முருகன், அம்பை நகரச் செயலாளர் வே.வடிவேல், இந்திய மாதர் தேசிய சம்மேளன மாவட்டச் செயலாளர் பி.சபியாபீவி, விக்கிரமசிங்கபுரம் நகரச் செயலாளர் பி.கண்ணன், அம்பை முன்னாள் ஒன்றியச் செயலாளர் ஏ.ராமகிருஷ்ணன், தூத்துக்குடி விவசாயச் சங்கப் பொறுப்பாளர் கிருஷ்ணமூர்த்தி உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டார்.

## கோவில்பட்டி என்.குருசாமி மறைவு



கோவில்பட்டி ஏஐடியூசி லாயல் மற்றும் லட்சுமி மில் பஞ்சாலை கமிட்டிச் செயலாளரும், கோவில்பட்டி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தோழரும் நகரக் குழு உறுப்பினருமான என்.குருசாமி 02.12.2024 அன்று இயற்கை எய்தினார். இறுதி அஞ்சலி செவ்வாய்க்கிழமை காலை 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றது.

## இராஜபாளையம் கோ.தர்மசாஸ்தா மறைவு



விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர் மற்றும் அரசுப் போக்குவரத்து ஏஐடியுசி நிர்வாகி கோ.தர்மசாஸ்தா உடல்நலக்குறைவால் காலமானார். தர்மசாஸ்தா இளைஞர் மன்றம், ஏஐடியுசி மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியிலும் பணியாற்றினார். அவரது மறைவையடுத்து கட்சியின் மாவட்டச் செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, வி.அழகிரிசாமி எக்ஸ் எம்பி, வி.பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ, ஏஐடியுசி மாநிலத் தலைவர் எஸ்.காசிவிஸ்வநாதன், நந்தாசிங், வி.இரவி, பாண்டியன், முத்துமாரி, சிபிஐ மாவட்ட துணைச் செயலாளர் செந்தில்குமார், நகரச் செயலாளர் விஜயன், ஒன்றியச் செயலாளர்கள் கணேசமூர்த்தி, இராமச்சந்திரன், இராஜேஸ்வரி மூர்த்தி உள்ளிட்டோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்கள்.

## ராகுல்ஜி கல்வி அறக்கட்டளையின் நூல்கள் வெளியீட்டு விழா!




ராகுல்ஜி கல்வி அறக்கட்டளை வெளியிட்டுள்ள 15 நூல்களின் வெளியீட்டு விழா, சென்னை ராயப்பேட்டையில் பாவை பிரிண்டர்ஸ் மாடியில் ஜனசக்தி துணை ஆசிரியர் த.லெனின் தலைமையில் நடைபெற்றது. பாவை பிரிண்டர்ஸ் பொது மேலாளர் ஆ.சிவகுமார் முன்னிலை வகித்தார். இளசை கணேசன் வரவேற்புரை ஆற்றினார்.

சாதிய ஒடுக்கு முறையும் சமத்துவப் போராட்டமும் என்ற நூலை இப்ராஹிம், அரசியல் சமூகம் பொருளாதாரம் என்ற நூலை கார்த்திகேயனும், முக்காலத்தின் முப்பால் என்ற நூலை ஆ.வி. கண்ணய்யாவும், பாமரனின் இலக்கியப் பார்வை என்ற நூலை எழுத்தாளர் பிரவீண் பஃறுளியும், தத்துவஞானிகளும் சமூக அறிவியலும் என்ற நூலை கவிஞர் வெய்யிலும், அரசியல் இன்றி அணுவும் அசையாது என்ற நூலை கே.கணேசனும், வகுப்பு வெறி பாசிச நஞ்சும் இந்திய பொது தேர்தல்களும் என்ற நூலை தாமோதரனும், கலை இலக்கியமும் கலைஞர்களும் என்ற நூலை கவிஞர் பச்சோந்தியும், பாட்டெழுதி பெயர் குவித்த பாட்டாளித் தோழன் என்ற நூலை கணபதி இளங்கோவும், நல்வழி காட்டிய ஔவையார் என்ற நூலை ரவியும், காரல் மார்க்ஸும் மனித நேயமும் என்ற நூலை வீ.சேதுலட்சுமியும், கியூபா முன்னேற்றத்தின் பின்னே என்ற நூலை கிருஷ்ணகுமாரும், பாரதி பாரத தேசத்தின் சாரதி என்ற நூலை பிரகாஷும், தொல்காப்பிய தமிழகம் என்ற நூலை சதீஷும், இந்திய விடுதலைப் போரின் திருப்புமுனை என்ற நூலை பரத் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். முனைவர் பஃறுளி, கவிஞர் வெய்யில், இப்ராஹிம் ஆகியோர் உரையாற்றினர். விழாவின் இறுதியில் ராகுல்ஜி கல்வி அறக்கட்டளை நிறுவனர் கா.சுப்பையா நன்றி கூறினார். புயல் மழைக்கு நடுவே புத்தக வெளியீடு சிறப்பாக நடைபெற்றது.

### மணப்பாறையில்
## குடிநீர், சொத்து வரிகளைத் திரும்பப் பெற வலியுறுத்தி சிபிஐ ஆர்ப்பாட்டம்




மணப்பாறை பேருந்து நிலையம் அருகில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நகரக் குழு சார்பில், குடிநீர் வரி, சொத்துவரி உயர்வு, தொழில் வரி மற்றும் பத்திரப் பதிவுக் கட்டண உயர்வைத் திரும்பப் பெற, தமிழக அரசை வலியுறுத்தி நகரச் செயலாளர் ஜனசக்தி உசேன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதற்கு சௌக்கத் அலி, திருநாவுக்கரசு, மரியராஜ், சின்னத்துரை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு விவசாயச் சங்க மாநில துணைச் செயலாளர் இந்திரஜித் கட்சியின் புறநகர் மாவட்ட துணைச் செயலாளர் பழனிச்சாமி, நிர்வாகக் குழு உறுப்பினர் சுப்ரமணியன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் ராஜேந்திரன், பெருமாள், பொருளாளர் ரவிச்சந்திரன், மாதர் சங்க மாவட்டத் தலைவர் கவிதா, குழந்தை தெரசு, ஏஐடியூசி போக்குவரத்துக் கழக நிர்வாகிகள் சுந்தர்ராஜ், மாசிமலை உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## ஆட்டோ தொழிலாளர்கள் போராட்டம்

### மாநிலப் பொதுக்குழு முடிவு






தமிழ்நாடு ஆட்டோ மற்றும் போக்குவரத்துத் தொழிலாளர் சம்மேளனத்தின் பொதுக்குழு கூட்டம் சிந்தாதரிப்பேட்டை கே.டி.கே தங்கமணி இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்குச் சம்மேளனத் தலைவர் எஸ்.காசி விஸ்வநாதன் தலைமை தாங்கினார். அப்போது எஸ்.எஸ்.தியாகராஜன் மற்றும் அண்மையில் மறைந்த சேலம் மாவட்ட ஏஐடியுசி பொதுச்செயலாளர் முருகன் ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. அஞ்சலித் தீர்மானத்தை மாநிலத் துணைச் செயலாளர் திருப்பூர் சசிகுமார் முன்மொழிந்தார். தமிழ்நாடு ஏஐடியூசி பொதுச் செயலாளர் எம்.ராதாகிருஷ்ணன் பொதுக்குழு கூட்டத்தை துவக்கி வைத்துச் சிறப்புரையாற்றினார். பொதுச் செயலாளர் ப. மாரியப்பன் வேலை அறிக்கையை முன்வைத்தார்.

ஆட்டோ தொழிலாளர்களின் முக்கியக் கோரிக்கைகளான மீட்டர் கட்டணம் உயர்த்தப்பட வேண்டும், தமிழ்நாடு அரசு புதிய ஆட்டோ செயலி ஒன்றை உருவாக்க வேண்டும், இஎஸ்ஐ திட்டம் அமல்படுத்த வேண்டும், பென்ஷன் ரூபாய் 3000, பொங்கலுக்கு போனஸ் ரூபாய் 5000 வழங்கக் கோரி 2025 ஜனவரி 8 ம் தேதி மாநிலம் முழுவதும் நலவாரிய அலுவலகங்களில் பெருந்திரள் முறையீடு மனு கொடுக்கும் இயக்கம் நடத்துவது. தமிழ்நாடு அரசின் பட்ஜெட் கூட்டத்தொடரின் போது ஆட்டோ தொழிலாளர்களின் அனைத்துக் கோரிக்கைகளையும் வலியுறுத்திக் கோட்டை நோக்கிக் காக்கிச்சட்டை பேரணிநடத்துவது என முடிவு செய்யப்பட்டது. மாநிலச் சம்மேளனத்தின் துணைத் தலைவர்களாக மு.சம்பத், எஸ்.ஏழுமலை ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

நிறைவாக மத்திய சென்னை மாவட்ட துணைச் செயலாளர் வி.ரவி நன்றி கூறினார்.

திருப்பூரில் மாமன்ற உறுப்பினர்களைத் தாக்கிய

## காவல்துறையைக் கண்டித்து ஆண்டிபட்டியில் ஆர்ப்பாட்டம்



திருப்பூர் மாநகராட்சியின் அநியாயச் சொத்துவரி உயர்வைக் கண்டித்துப் போராட்டம் நடத்திய, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருப்பூர் மாவட்டச் செயலாளரும், மாமன்ற உறுப்பினருமான

ரவிச்சந்திரன் மற்றும் மாமன்ற உறுப்பினர்களைத் தாக்கிய காவல்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வலிறுத்திக் கட்சியின் ஆண்டிபட்டி ஒன்றியக் குழு சார்பில், ஒன்றியச் செயலாளர் பா.பிச்சைமணி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நகரச் செயலாளர் க.முனீஸ்வரன் முன்னிலை வகித்தார். மாவட்ட துணைச் செயலாளர் வே.பரமேஸ்வரன் ஒன்றியக்குழு உறுப்பினர்கள் வி.வேலுச்சாமி க.பழனிச்சாமி ஆகியோர் கண்டன உரையாற்றினர்கள்.

## வாசுதேவநல்லூரில் கட்சி நூற்றாண்டுத் தயாரிப்புப் பேரவை



வாசுதேவநல்லூரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு விழா தயாரிப்புப் பேரவை வாசு ஒன்றியச் செயலாளர் ப.வேலு தலைமையில் நடைபெற்றது,

ஏஐடியூசி மாநிலத் தலைவர் எஸ்.காசிவிஸ்வநாதன், மாவட்டச் செயலாளர் டி. இசக்கித்துரை, மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.வேலாயுதம், மாவட்ட ஏஐடியூசி பொதுச்செயலாளர் டி.சுப்பையா, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பி.சிங்காரவேலு, பி.பாலசுப்பிரமணியன், ஆர்.சமுத்திரக்கனி மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

## கலை இலக்கியப் பெருமன்ற சூலூர் தெற்கு வட்டக்கிளை மாநாடு

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சூலூர் தெற்கு வட்டக்கிளையின் நான்காவது மாநாடு, சூலூர் ஏ.ஆர்.பழனிசாமி அரங்கத்தில் நடைபெற்றது. மாதாந்திர நிகழ்வுகளின் 75 வது நிறைவு விழாவாகவும் இது அமைந்தது. கிளைச்செயலாளர் சூ.பே. நடராசு தலைமை தாங்கினார். மூத்த நாடகக் கலைஞர் எஸ்.எம். அய்யாசாமி பெருமன்றக் கொடியை ஏற்றினார். மாநிலக்குழு உறுப்பினர் எஸ்.கோட்டியப்பன் வரவேற்புரை வழங்கினார். மாவட்டச் செயலாளர் ப.பா.ரமணி துவக்கவுரை ஆற்ற, மாவட்டத் துணைத்தலைவர் எம்.வி.ராஜன் வாழ்த்துரை வழங்கினார்கள்.

கவிஞர்கள் மற்றும் மூத்த தோழர்களுக்கு இலக்கிய ஆர்வலர் சூ.மா.பத்மநாபன் நினைவுக் கேடயம் வழங்கிச் சிறப்பித்தார். கலைப் போட்டிகளில் பங்கெடுத்தோருக்குக் கிளைப் பொருளாளர் பெ.மௌனசாமி பரிசுகளை வழங்கினார். எம்.பி. மாப்பிள்ளை' எனும் நாடகம், சூலூர் கல்சுரல் அகாதமியின் முழங்கு இசை, பரத நாட்டியம், மாணவிகள் ப.பாரதி, வே.சர்மிளாதேவி ஆகியோரின் உரைவீச்சு, கவிஞர்களின் கவிதை வாசிப்பு ஆகியவை நடைபெற்றன. கிளைத் தலைவராக அ.கோபாலகிருஷ்ணன், துணைத் தலைவர்களாக இரா.இராமசாமி, லெனின் லோகமித்ரா, செயலாளராக சூ.பே.நடராசு, பொருளாளராக பெ.மௌனசாமி, துணைச் செயலாளராக சூ.பே.அண்ணாதுரை, வை.கனகசெல்வன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தங்கராசு நன்றி கூறினார்.

## வினாடி - வினா விடைகள்

1. குறுந்தொகை (221: 3 4)
2. நல்லாவூர் கிழார்
3. நாயன்மார்கள்
4. ஆழ்வார்கள்
5. குறள் வெண்பா
6. இன்னா நாற்பது, இனியவை நாற்பது

## குருதிக் கொடையாளர் விருது நற்சான்று வழங்கிப் பாராட்டு



குடியாத்தம் நகரப் பன்னாட்டு லைன்ஸ் சங்கம் சார்பில், குடியாத்தம் அரசு மருத்துவமனை ஆலோசனைக் குழு உறுப்பினரும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வேலூர் மாவட்ட துணைச் செயலாளருமான துரை செல்வம் 36 முறை குருதி தானம் செய்தமைக்குப் பன்னாட்டு லைன்ஸ் சங்க ஆளுநர் பாராட்டி குருதிக் கொடையாளர் விருதும், நற்சான்றும் வழங்கிச் சிறப்பித்தனர்.

இதில் கட்சியின் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் டி.ஆனந்தன், கே.சி.பிரேம்குமார், மாவட்டக் குழு உறுப்பினர் ஆர்.அக்பர், கே.வி.குப்பம் ஒன்றிய துணைச் செயலாளர்கள் இரா.பிச்சமுத்து, டி.திருநாக்கரசு, ஒன்றியக் குழு உறுப்பினர்கள் டி.மணியரசன், ஜி.தன்ராஜ் மற்றும் அதாவுல்லா ஆகியோர் உடனிருந்து வாழ்த்துத் தெரிவித்தார்கள்.

## போக்குவரத்துத் துறைச் செயலாளருடன் அனைத்துத் தொழிற்சங்கத்தினர் சந்திப்பு

போக்குவரத்துக் கழகங்களில் செயல்படும் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு சார்பாக, ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தை, ஓய்வூதியர்களின் அக விலைபடி உயர்வு, வாரிசு வேலை, தனியார்மய நடவடிக்கைகள் குறித்து கடந்த 18.11.2024ஆம் தேதி முதலமைச்சர், போக்குவரத்து அமைச்சர், போக்குவரத்துச் செயலாளர் ஆகியோருக்கு மனு அளித்திருந்தார்கள். அதை வலியுறுத்தும் அடிப்படையில் அனைத்துத் தொழிற்சங்கங்கள் சார்பில், போக்குவரத்துச் செயலாளரைச் சந்தித்துக் கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

போக்குவரத்துச் செயலாளர் ஊதிய உயர்வு பேச்சுவார்த்தையை டிசம்பர் 2வது வாரத்திற்குள் நடத்த ஏற்பாடு செய்வதாகத் தெரிவித்தார். ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு ஓய்வுகாலப் பலன்கள் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் 3 மாத காலத்திற்கான ஓய்வுகால பலன் வழங்கப்படும் எனத் தெரிவித்தார். முழுமையாக ஓய்வுகாலப் பலனை வழங்க வலியுறுத்தப்பட்டது.

அகவிலைப்படி உயர்வு வழக்கில் நீதிமன்றம் தீர்ப்பளித்த பின்பும், மீண்டும் அப்பீல் செய்தது சரியல்ல எனத் தெரிவித்து, அரசிடம் விரைந்து பேசி அகவிலைப்படி உயர்வை வழங்க வலியுறுத்தப்பட்டது. ஓட்டுனருடன் நடத்துனர் நியமனம் சரியல்ல. தனித்தனியாக நியமனம் செய்ய வேண்டும். வாரிசு வேலைக்கு வரும் பெண்களுக்கு உடல் தகுதியில் உயரத்தைக் குறைக்க வேண்டுமென ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்டது. அரசாணை பிறப்பிக்க விரைவாக நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

தனியார்ப் பேருந்துகளை வாடகைக்கு எடுத்து இயக்குவது, ஒப்பந்த முறையில் பணியாளர் நியமனம் போன்றவை சமூக நீதிக்கு எதிரானது, இந்நடவடிக்கைகளைக் கைவிட வலியுறுத்தப்பட்டது. போக்குவரத்துக் கழகங்களின் நிதிப்பிரச்சனைக்குத் தீர்வுகாண வரவுக்கும், செலவுக்குமான வித்தியாசத் தொகையை அரசு வழங்க அனைத்துத் தொழிற்சங்கங்கள் சார்பில் வலியுறுத்தப்பட்டது.

## போக்குவரத்துக் கழகக் காலிப் பணியிடங்களை நிரப்பிடப் போக்குவரத்து ஏஐடியூசி வலியுறுத்தல்



மணப்பாறை கோவில்பட்டி சாலையில் உள்ள இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில், மணப்பாறை அரசு போக்குவரத்துக் கழக ஏஐடியூசி கிளை ஆண்டு பேரவை, கிளைத் தலைவர் சரவணன் தலைமையில் நடைபெற்றது.

செயலாளர் மாசிமலை வேலை அறிக்கையும், பொருளாளர் கண்ணன் வரவு செலவு அறிக்கை தாக்கல்கள் செய்தனர்.

பேரவையை வாழ்த்திக் கட்சியின் திருச்சி புறநகர் மாவட்ட துணைச் செயலாளர் பழனிசாமி, நகரச் செயலாளர் ஜனசக்தி உசேன், ஒன்றிய துணைச் செயலாளர் ராஜேந்திரன், ஓய்வு பெற்றோர் சங்கச் செயலாளர் அன்பழகன், மணப்பாறை கிளைத் தலைவர் குமரசங்கு செல்வராஜ், உள்ளாட்சி ஏஐடியுசி செயலாளர் அருணகிரி ஆகியோர் பேசினார்கள்.

இதில் சரவணன் தலைவராகவும், மாசிமலைச் செயலாளராகவும், பொருளாளராக கண்ணனும், துணைத் தலைவர்களாக முத்துசாமி, பெரியசாமி, கிருஷ்ணமூர்த்தி, தனிஷ்லாஸ், ஸ்டாலின், வேளாங்கண்ணியும் துணைச் செயலாளர்களாக அர்ஜுனன், காளிதாசன், ராமசாமி, அன்பழகன் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக தங்கவேல், முருகேசன், தனபால், வடிவேல், ராஜேந்திரன், முருகேசன், சார்லஸ், தகவல் தொழிற்நுட்பம் தேவேந்திரன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

புதிய நிர்வாகிகளை வாழ்த்தி சம்மேளன மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் சுப்பிரமணியன், சம்மேளன மாநிலப் பொருளாளர் நேருதுரை, மத்திய சங்க தலைவர் செல்வராஜ், பொதுச் செயலாளர் சுந்தர்ராஜ், துணைப் பொதுச் செயலாளர்கள் ஆறுமுகம், சந்திரசேகரன், கிளைத் தலைவர் விக்கிரமாதித்தன், பழனிச்சாமி, அருணகிரி ஆகியோர் பேசினார்கள்.


தமிழக அரசு 15வது ஊதிய ஒப்பந்தப் பேச்சு வார்த்தையை நடத்திட வேண்டும். அரசின் வழித்தடங்களில் தனியார் பேருந்து இயக்குவதை நிறுத்தம் செய்யவேண்டும். போக்குவரத்துக் கழகங்களில் ஏற்பட்டுள்ள காலிப் பணியிடங்களை முழுமையாக நிரப்பிட வேண்டும். போக்குவரத்துக் கழகங்களில் அவுட்சோர்சிங் முறையில் ஓட்டுநர், நடத்துநர்கள் நியமனம் செய்யும் முயற்சியைக் கைவிட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## திருத்தம்

கடந்த 23.11.2024 ஆம் தேதி இந்திய தேசிய மாதர் சம்மேளனம், கோவை ஈஷா அறக்கட்டளை ஆசிரமத்தின் சட்டவிரோதச் செயல்கள் மீது உயர்நீதிமன்றக் கண்காணிப்பில் விரிவான விசாரணை நடத்த வேண்டும் என வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்தியது. தமிழ்நாடு முழுவதும் இருந்து 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டத்தில் விருதுநகர் மாவட்டத்தில் இருந்து மாவட்டத் தலைவர் மாரீஸ்வரி, மாவட்டப் பொருளாளர் முத்துலட்சுமி ஆகியோர் தலைமையில் இரண்டு வாகனங்களில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வு குறித்து 24.11.2024 ஆம் தேதி ஜனசக்திக்கு எழுதிய செய்திக் கட்டுரையில் விருதுநகர் மாவட்டம் விடுபட்டுள்ளது. இந்தத் தவறு நடந்ததற்கு வருந்துகிறோம். வாசகர்கள் இதனையும் சேர்த்து வாசித்துக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

**நா. பெரியசாமி**

## அரியலூரில் அனைத்துத் தொழிற்சங்கம் ஆர்ப்பாட்டம்




அரியலூரில் அனைத்துத் தொழிற்சங்கம் சார்பில், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்து, வேலைவாய்ப்பை உருவாக்கி இளைஞர்களுக்கு வேலை கொடு, தொழிலாளர்களுக்கு எதிராகத் திருத்திய நான்கு சட்டத் தொகுப்புகளைத் திரும்பப் பெறு, விவசாயிகளுக்குக் குறைந்தபட்ச ஆதார விலையைச் சட்டமாக்கு உள்ளிட்ட 26 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, அரியலூர் அண்ணா சிலை அருகில், தொழிற்சங்கக் கூட்டமைப்பு சார்பாக, ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் த.தண்டபாணி, தொமுச மாவட்டச் செயலாளர் ரெ.மகேந்திரன், சிஐடியு மாவட்டச் செயலாளர் பி.துரைசாமி, ஐஎன்டியூசி மாவட்டத் தலைவர் டி.விஜயகுமார், எச்எம்எஸ். மாவட்டச் செயலாளர் எஸ்.இராமசாமி ஆகியோர் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், ஏஐடியுசி ஆர்.தனசிங், அரியலூர் நகராட்சி ரெ.நல்லுசாமி, செ.மாரியப்பன், பெ. மணிகண்டன், ஜெயங்கொண்டம் நகராட்சி என்.சுரேஷ், காந்தி, முனியம்மாள், லதா உட்பட 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## கோபி அரசியல் சித்தாந்தப் பயிற்சி முகாம்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சிய மெய்யியல் கல்வி நிலையம் தியாகசீலர் சி.எஸ்.சுப்பிரமணியம் அரங்கில், கட்சியின் ஈரோடு தெற்கு, திருப்பூர் புறநகர், திருப்பூர் மாநகர் மாவட்டக் குழு உறுப்பினர்களுக்கு அரசியல் சித்தாந்தப் பயிற்சி முகாம் சிறப்பாக நடைபெற்றது.

கே.சுப்பராயன் எம்பி, எம்.செல்வராஜ், முனைவர் கணபதிஇளங்கோ, முனைவர் ஆர்.மணிமோகன், வஹிதா நிஜாம், எஸ்.காசி விஸ்வநாதன், எம்.ரவி, எஸ்.மோகன்குமார் ஆகியோர் ஆசிரியர்களாக இருந்து வகுப்பெடுத்தனர்.

பயிற்சி முகாமில் பங்கேற்றவர்களுக்கு, மார்க்சிய மெய்யியல் பள்ளி முதல்வர் எம்.செல்வராஜ், மேலாளர் வி.கார்த்திவேல் ஆகியோர் முன்னிலையில், மாநிலச் செயற்குழு உறுப்பினர் எம்.ரவி சான்றிதழ் வழங்கினார்.

## பால பிரஜாபதி அடிகளாரின் துணைவியார் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

பால பிரஜாபதி அடிகளாரின் துணைவியார் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

அய்யா வைகுண்டர் வகுத்து வழங்கிய, அறம் சார்ந்த மதச்சார்பற்ற கொள்கை வழியை முன்னெடுத்து வரும் சாமிதோப்பு அய்யா வைகுண்டர் தலைமை பதி அறங்காவலர் அய்யா, பால பிரஜாபதி அவர்களின் வாழ்விணையர் ரமணி பாய் அம்மா 02.12.2024 அன்று காலமானார் என்ற செய்தி அறிந்து, வேதனை அடைந்தோம்.

அடிகளாரின் சமூக சேவைக்கு ரமணி அம்மையார் பங்களிப்பு அடிப்படையானது. வாழ்விணையர் இழப்பு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அய்யா வழியில் அடிகளார் மேற்கொண்டு வரும் சமூக நல்லிணக்கப் பணிகள் அவரை ஆற்றுப்படுத்தும் வல்லமை கொண்டது. ரமணி அம்மையார் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது. அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது என மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## சிவகாசியில் சிறுகதைப் போட்டி பரிசளிப்பு விழா

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சிவகாசி கிளை மற்றும் கந்தகப்பூக்கள் இலக்கிய அமைப்பு இணைந்து நடத்திய சிறுகதைப் போட்டியின் பரிசளிப்பு விழாவிற்கு, வாரமுரசு ஆசிரியர் அ.ராஜா சொர்ண சேகர் தலைமை தாங்கினார். புலவர் கல்யாண சுந்தரம் முன்னிலை வகித்தார். எழுத்தாளர் லட்சுமி பாலா வரவேற்புரை வழங்க, க.சமுத்திரம் சிறப்புரை ஆற்றினார். சிறுகதைப் போட்டியில் வெற்றி பெற்ற சிறுகதைகள் அரங்கேற்றம் செய்யப்பட்டன. சிறுகதைகளுக்குச் சக படைப்பாளிகளும், மூத்த தோழர்களும் விமர்சனங்கள் வழங்கினர். வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளும், சான்றிதழ்களும் கொடுக்கப்பட்டன. எழுத்தாளர்களை வாழ்த்தி முனைவர் பொ.நா.கமலா, கவிஞர் சரோ ஆகியோர் உரையாற்றினார். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சிவகாசி மாநகரச் செயலாளர் முத்து விழாவினை ஒருங்கிணைப்பு செய்தார். கவிஞர் அ.இலக்கிய ராஜா நன்றியுரை வழங்கினார்.

## வாங்க பேசலாம் திங்கள் கலை இலக்கிய அமர்வு

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் முன்னெடுக்கும் வாங்க பேசலாம் திங்கள் கலை இலக்கிய அமர்வு, 57வது தேசிய நூலக வார விழாவாக வேதாரண்யம் ஓய்வு பெற்ற அலுவலர் சங்கக் கட்டடத்தில் பெருமன்ற கிளைத் தலைவரும், தலைமை ஆசிரியருமான இள.தொல்காப்பியம் தலைமை வகித்தார். கிளைச் செயலாளர் தங்க.குழந்தைவேலு, துணைச் செயலாளர் வீ.சத்தியராஜ், துணைத் தலைவர் த.சுகன்யா, அரசு நூல் நிலைய நூலகர் அருள்மொழி முன்னிலை வகித்தனர்.

இதில் கவிஞர் செழியரசு, குருகுலம் பெரியண்ணா ஆகியோர் அரிய நூல்களைத் தேனீயாய்ச் சேமித்து சமூக அறிவு பரவலுக்காகக் காரணமாக இருக்கும், கருப்பம்புலம் பாலாஜி அவர்களுக்கு, தனிநபர் பராமரிக்கும் நூலகத்திற்கான அரசு விருது கிடைத்துள்ளதைப் பாராட்டினர். விழாவில், மாநிலக்குழு உறுப்பினர் எம்.ஆர்.சுப்பிரமணியன், மாவட்டத் தலைவர் புயல் சு.குமார், பேராசிரியர் பிரபாகரன், தலைமை ஆசிரியர்கள் பொதுவுடைச்செல்வன், மோகனசுந்தரம், தமிழாசிரியர் சன்முகசுந்தரம், பாலசுப்ரமணியன், சித்திரவேல், வசந்தா டீச்சர், கவிஞர்கள் கார்த்திகேயன், பக்கிரிசாமி, கருப்பம்புலம் புத்தக நிலைய நிறுவனர் கணேசன், முன்னாள் படை வீரர் தமிழரசன் எனப் பலரும் பங்கேற்றுப் பேசினர். இவர்களின் பேச்சு பாலாஜி ஆசிரியரின் பன்முகத் திறனை வெளிப்படுத்தியது. முன்னதாக துணைத் தலைவர் வீ.எழிலரசன் வரவேற்றார். கவிஞர் கோவி. ராஜேந்திரன் நன்றி தெரிவித்தார்.

## பத்திரிகையாளர் நல வாரியத்தில் 3,300 பேர் உறுப்பினராகச் சேர்ப்பு

அமைச்சர் தகவல்

பத்திரிகையாளர்களின் நலனைக் காப்பதில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு, ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் பத்திரிகையாளர் நலவாரியம் உருவாக்கப்பட்டது. இந்த நலவாரியத்தில் 3300 பேர் உறுப்பினர்களாக இணைக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாடு முழுவதும் 2431 செய்தியாளர் அங்கீகார அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 446 செய்தியாளர்களுக்கு சுகாதார அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. பத்திரிகையாளர் நலவாரியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் செய்தியாளர்களின் குடும்பங்களுக்கு நிதி உதவி போன்ற பல்வேறு நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## திருவண்ணாமலை வட்டக் குழு கூட்டம்




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருவண்ணாமலை வட்டக் குழு கூட்டம் கே.வெங்கடேசன் இல்லத்தில் நடைபெற்றது. ஆர்.ராமமூர்த்தி தலைமை தாங்கினார். வட்டச் செயலாளர் கே.வெங்கடேசன் வேலை அறிக்கையைச் சமர்ப்பித்தார். மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் பி.எஸ்.மாசிலாமணி அரசியல் மற்றும் அமைப்புநிலை குறித்துப் பேசினார். இதில் வி.முத்தையன், ஜி.பிலிப்ராஜ், டி.ராசேந்திரன், சு.கிருஷ்ணராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சிட்கோ சாலை வசதிகளை மேம்படுத்த வேண்டும்

சிபிஐ கிளைக் கூட்டத்தில் தீர்மானம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சிட்கோ கிளைக்கூட்டம் பி.அறிவொளி தலைமையில் நடைபெற்றது. இதில் மத்திய மண்டலச் செயலாளர் கே.ரவீந்திரன், மண்டலக் குழு உறுப்பினர் ஏ.சுப்பிரமணியன், முருகேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிட்கோ உருவாக்கப்பட்ட காலத்தில் அமைக்கப்பட்ட தார்ச்சாலைகள் பின்பு புனரமைக்கப்படவே இல்லை. இங்கு குடியிருப்புகளும், தொழிற்சாலைகளும் உள்ளன. எனவே, இந்தச் சாலைகள் மற்றும் இணைப்புச் சாலைகளை உடனடியாகப் பழுது நீக்கி, செப்பனிட்டுப் புதிய தார்ச்சாலைகள் அமைக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## வடமதுரை காவல் சார்பு ஆய்வாளரை கண்டித்து வழக்கறிஞர்கள் போராட்டம்



திண்டுக்கல் மாவட்ட வடமதுரை காவல் சார்பு ஆய்வாளரின் சித்திரவதையைக் கண்டித்து, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வழக்கறிஞர்கள் போராட்டம் நடைபெற்றது.

## அமைப்புசாராத் தொழிலாளர் கூட்டமைப்பின் மாநில வாகன விழிப்புணர்வுப் பயணம்

ஒன்றிய அரசு தொழிலாளர் விரோத நான்கு சட்டத் தொகுப்புகளை அமல்படுத்தக் கூடாது. அனைத்து அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கும் இஎஸ்ஐ மருத்துவ வசதி, ஓய்வூதியம், வீட்டு வசதி வழங்க வேண்டும். தொழில்வாரியாக முத்தரப்பு வாரியங்கள் செயல்படுத்த வேண்டும். அனைத்து வாரியங்களில் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்குச் சமூகப் பாதுகாப்பு நிதியாக ஒரு சதம் லெவி வசூலிக்க வேண்டும். 36 நலவாரியங்களையும் முறையாகச் செயல்படுத்த வேண்டும் அதற்குரிய நிதி ஒதுக்கீடு வேண்டும். உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி அமைப்புசாராத் தொழிலாளர் கூட்டமைப்பின் சார்பில், தமிழ்நாடு முழுவதும் வாகன விழிப்புணர்வு பயணம் மற்றும் கூட்டங்கள் நவம்பர் 9 முதல் நவம்பர் 26 வரை நடைபெற்றது.

நிறைவு நாளான நவம்பர் 26 அன்று சென்னை ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகில் நிறைவு விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரிய தலைவர் சேமநாராயணன் தலைமை தாங்கினார். கூட்டமைப்பின் செயலாளர் கீதா நிகழ்ச்சியை ஒருங்கிணைத்துச் சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில், எல்பிஎஃப் நடராஜன், ஏஐடியுசிஆர். துரைசாமி, ஆட்டோ சம்மேளனம் பி.மாரியப்பன், எல்டியூசி ஏ.எஸ்.குமார், முனுசாமி, எஸ்கேஎம் பாலகிருஷ்ணன், எம்எல்எப் அந்தரிதாஸ் சிறப்புரையாற்றினார்கள். நிறைவாக எச்எம்எஸ் சுப்பிரமணியபிள்ளை நிறைவுரை ஆற்றினார். அருள்தாஸ் நன்றி கூறினார்.

## மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் திட்டப் பணிகளை ஆய்வு செய்தார்



மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். இவ்வாய்வின்போது, சீர்காழி வருவாய் கோட்டாட்சியர் சுரேஷ், ஊரக வளர்ச்சித் துறை செயற்பொறியாளர் செந்தில்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## பகத்சிங் வேலை உறுதி அளிப்புச் சட்டம் நிறைவேற்றிட நெல்லை மாவட்ட இளைஞர் பெருமன்ற மாநாடு வலியுறுத்தல்




அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற நெல்லை மாவட்ட 15வது மாநாடு மாவட்ட தலைவர் கே.முத்துகிருஷ்ணன் தலைமையில், கொடியேற்றத்துடன் நடைபெற்றது. எஸ்ஏபி பாலன் முன்னிலை வகித்தார். மாவட்டத் துணைத் தலைவர் பி.ஷிபானா வரவேற்புரை ஆற்றினார், அஞ்சலித்தீர்மானத்தை பி.ராமகிருஷ்ணன் வாசித்தார், வேலை அறிக்கையை மாவட்டச் செயலாளர் பி. சுரேஷ் சமர்ப்பித்தார். வரவு செலவு அறிக்கையை மாவட்டப் பொருளாளர் கே.சந்தானமுத்து தாக்கல் செய்தார். கட்சியின் நெல்லை மாவட்டச் செயலாளர் ஆர்.சடையப்பன், தூய்மைப் பணியாளர் சங்கச் செயலாளர் எம்.எஸ். மணியன் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள். இளைஞர் பெருமன்ற மாநில துணைச் செயலாளர் இரா.தமிழ் பெருமாள் மாநிலக் குழு முடிவுகளைப் பற்றி விரிவாகப் பேசினார்கள்.

அனைவருக்கும் சமமான, கட்டணமில்லாக் கல்வி கிடைத்திட வேண்டும், பகத்சிங் வேலை உறுதி அளிப்புச் சட்டம் நிறைவேற்றிட வேண்டும், அரசுப் பணியில் காலியாக உள்ள இடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும், தமிழகத்தில் போதைக் கலாச்சாரத்தை ஒழித்திட வேண்டும், தனியார்த் துறையில் இட ஒதுக்கீடு கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாவட்ட துணைச்செயலாளர் எம்.நவராஜ் மோசஸ் நன்றி கூறினார்.

# புரட்டிப் போட்ட ஃபெஞ்சல் புயல், வெள்ளம் பாடம் கற்கப் போவது எப்போது?

**பெஞ்சல் புயல், மழை தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களையும் புதுச்சேரியையும் புரட்டிப் போட்டுள்ளது. மக்களின் இயல்பு வாழ்க்கையும் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.**

வங்கக் கடலில் உருவான ஃபெஞ்சல் புயல் புதுச்சேரி அருகே நவம்பர் 30 அன்று இரவு கரையைக் கடந்தது. இதனால் புதுச்சேரி மற்றும் விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, தர்மபுரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. ஆறுகளில் கரைபுரண்டோடிய வெள்ளத்தால் பல கிராமங்கள் தனித் தீவுகளாயின. ஏரிகளில் உடைப்பு ஏற்பட்டதால் விளைநிலங்கள் தண்ணீரில் மூழ்கின. வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்து மக்கள் கடும் அவதிக்கு ஆளாயினர். சாகுபடி செய்திருந்த பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கின. நன்கு விளைந்திருந்த கரும்புகள் சேதமடைந்ததால் விவசாயிகள் பெரும் இழப்புக்கு ஆளாயினர். நெல், உளுந்து போன்ற பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கின.

விழுப்புரம் மாவட்டத்தில் 44 ஆண்டுகளுக்குப் பிறகு பெருவெள்ளத்தைப் பார்த்ததாக பகுதி மக்கள் தெரிவித்தனர். "59 நிவாரண முகாம்களில் 3,200க்கும் மேற்பட்டோர் தங்கவைக்கப்பட்டனர். 78 கிராமங்களில் அதிக அளவு நீர் புகுந்துவிட்டது" என்று மாவட்ட ஆட்சித் தலைவர் பழனி. புயல், மழையால் விவசாயிகள் மட்டுமல்லாமல், விவசாயக் கூலி தொழிலாளர்களும் பெரும் பாதிப்புக்கு ஆளாயினர். வீடுகளில் இருந்த பொருட்கள் மட்டுமல்ல ஆடு, மாடு உட்பட அனைத்தையும் இழந்துவிட்டனர். திருப்பாச்சனூர், மேட்டுப்பாளையம், பில்லூர், காணை, மரக்காணம், செஞ்சி உட்பட 20க்கும் மேற்பட்ட இடங்களில் தரைப்பாலங்கள் மூழ்கிவிட்டன. இதனால் 140க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டது.

இதேபோன்று கடலூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, தர்மபுரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களிலும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. விழுப்புரம் மாவட்டத்தில் ஒரே நாளில் 50 செ.மீ. மழை பெய்துள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் தொடர் கனமழையால் அண்ணாமலையார் மலையில் மண் சரிவு ஏற்பட்டதுடன், பாறைகள் உருண்டு விழுந்ததில் அடிவாரத்தில் இருந்த வ.உ.சி.நகர் வீடுகள் சேதமடைந்தன. மண் சரிவில் புதைந்த வீட்டுக்குள் இருந்த 7 பேர் சடலமாக மீட்கப்பட்டனர்.

பருவநிலை மாற்றத்தால் (Climate change) புயல், மழை பெய்வதிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. குறுகிய கால இடைவெளியில் அதிகப்படியான மழை கொட்டுவதும், இதனால் மக்களுக்குப் பெரும் பாதிப்புகள் ஏற்படுவதும் அதிகரித்து வருகின்றன.

எனவே, மழைபெய்தால் பிஸ்கெட் பாக்கெட், தண்ணீர் பாட்டில் கொடுத்து போட்டோஷூட் எடுத்துக்கொண்டிருக்கும் கட்சிகளுடன் அரசும் ஆளும்கட்சியும் போட்டியிட்டுக் கொண்டிருக்காமல், தமிழ்நாட்டின் உட்கட்டமைப்பு பிரச்சனையை நவீன அறிவியல் முறையில் தீர்க்க முன்வர வேண்டும். உட்கட்டமைப்பு பிரச்சனை இப்பொழுது ஏற்பட்டதால் நீண்டகாலமாக நிலவுவது. பின்பற்றிவரும் பொருளாதார கொள்கைகளுடன் தொடர்புடையது. எனவே, பருவநிலை மாற்றத்தைக் கவனத்தில் கொண்டு நகரங்களின் விரிவாக்கத்திற்குத் திட்டம் வகுத்திட வேண்டும். அறிவியல் பூர்வமாக நவீன குடியிருப்புத் திட்டங்களை வகுத்திட வேண்டும். சென்னை போன்ற பெருநகரங்களுக்கு மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் மக்களின் குடியிருப்புகளை மேம்படுத்த வேண்டிய தேவையையும் கடமையையும் தமிழ்நாடு அரசு எதிர்கொண்டிருக்கிறது. இது அவசியமானதும் அவசரமானதும் ஆகும்.

**மணிமாறன்**



## ஒரே நாளில் தீவிரமடையும் புயல்



"பலவீனமான புயலில் இருந்து அதிதீவிரப் புயலாக உருவாக இதுவரை இரண்டு முதல் நான்கு நாட்கள் வரை எடுத்துக் கொண்டன. தற்போது ஒரே நாளுக்குள் தீவிரமடைகின்றன. இதனால் முன்னறிவிப்பு செய்வது, பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளை மேற்கொள்வது போன்றவற்றுக்கு மிகச் சொற்ப நேரமே இனிமேல் கிடைக்கும்"

**ராக்ஸி மேத்யூ கோல்**
காலநிலை அறிவியலாளர்
இந்திய வெப்பமண்டல வானிலை ஆய்வு நிறுவனம்(IITM)

## முன்னறிவிப்பு கட்டமைப்புக்கு சவால்

"இப்போது காலநிலை மாற்றம், புயல்களின் தீவிரம் ஆகியவை நம் முன்னறிவிப்பு கட்டமைப்புகளுக்கு மேலதிக சவால்களைக் கொடுக்கின்றன. ஒவ்வோர் ஆண்டும் முன்னறிவிப்புக்காகக் காத்திருப்பதற்குப் பதிலாக, தீவிரமடைந்து வரும் புயல்கள், உயரும் கடல் மட்டங்களுக்கு ஏற்ப கடலோர சமூகங்களுக்கு உதவும் நீண்ட கால கொள்கைகளை நாம் வகுக்கவேண்டும். நகரங்களை 'மறுவடிவமைப்பு' செய்ய வேண்டும்"

**ராக்ஸி மேத்யூ கோல்**
காலநிலை அறிவியலாளர்
இந்திய வெப்பமண்டல வானிலை ஆய்வு நிறுவனம்(IITM)

புயல் பாதிப்பு படங்கள் 15ம் பக்கம்

## இயற்கை பேரிடர் பாதித்த மாவட்டங்களாக அறிவிக்க இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

புயல், வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மாவட்டங்களை இயற்கை பேரிடர் பாதித்த மாவட்டங்களாக அறிவிக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

வடகிழக்கு பருவமழை மற்றும் ஃபெஞ்சல் புயலின் காரணமாக தமிழகத்தின் பல மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, தர்மபுரி, கிருஷ்ணகிரி ஆகிய ஆறு மாவட்டங்கள் மிக கடுமையாக பாதிக்கப்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியது.

பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர், துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் நேரில் சென்று பாதிப்புகளை கண்டறிந்ததுடன், பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறியிருப்பது வரவேற்கத்தக்கது.

மனித உயிர்கள் இழப்பு, விவசாயம், கால்நடைகள், மற்றும் குடியிருப்புகள் பாதிப்புகளை கணக்கில் கொண்டு நிவாரணங்களையும் மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்துள்ளார். நிவாரணத் தொகை ஓரளவிற்கு ஆறுதல் அளிப்பதாக இருந்தாலும் கூட உயிர் இழந்தவர்களின் குடும்பத்திற்கு ரூபாய் 5 லட்சம் என அறிவித்துள்ளதை மறுபரிசீலனை செய்து, ரூபாய் 10 லட்சம் என அறிவிக்க கோருகிறோம்.

மேலும் விவசாயம் பாதிப்பிற்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.17 ஆயிரம் என்பதனை மறுபரிசீலனை செய்து ஏக்கர் ஒன்றுக்கு குறைந்த பட்சம் ரூபாய் 25 ஆயிரம் வழங்கிட கேட்டுக் கொள்கிறோம்.

கடற்கரையோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களில் குடிசை வீடுகளில் வசிக்கும் மக்கள் ஆண்டுதோறும் பருவமழை மற்றும் புயல் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டு தங்களின் குடிசைகளை இழந்து பரிதவிக்கும் அவலமான நிலைக்கு நிரந்தர தீர்வு காண, குடிசையில்லா நிலையை உருவாக்கி கான்கிரீட் வீடுகளை அரசு கட்டிக் கொடுக்கக் கூடிய முறையில் ஓர் விரிவடைந்த திட்டத்தை தயாரித்து செயல்படுத்திட வேண்டுகிறோம்.

மழை, வெள்ளம், புயல் காரணமாக பாதிக்கப்பட்ட மாவட்டங்களை இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவித்து, அனைத்துவகை நிவாரண நடவடிக்கையும் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும்.

பாதிப்பில் இருந்து முழுமையான மீட்பு பணிகளை மேற்கொள்ள, தமிழ்நாடு அரசு கோரியுள்ள நிவாரண நிதியினை ஒன்றிய அரசு கடந்த காலங்களைப் போன்று தமிழகத்தை புறக்கணிக்காமல், முழுத்தொகையையும் தாமதமின்றி உடன் வழங்கிட வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வலியுறுத்தியுள்ளார்.

## ககாரின் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கல்





இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அம்பத்தூர் மூத்த தோழர் ஆர். துரைசாமி அவர்களின் மகன் தோழர் ககாரின் (40) உடல் நலக் குறைவால் மறைந்தார். அவரது உடல் அயனம்பாக்கம் ரோடு பிளாசம் என்கிலேவ் அப்பார்ட்மெண்ட்க்குக் கொண்டு வரப்பட்டு அஞ்சலிக்கு வைக்கப்பட்டது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் டி.எம்.மூர்த்தி, மாவட்டச் செயலாளர்கள் ப.கருணாநிதி, எஸ்.கே.சிவா, வெங்கடேஷ் வேம்புலி உள்ளிட்ட தோழர்கள் இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.

# ஃபெஞ்சல் புயல், வெள்ளப் பாதிப்புகள்



















வணக்கம்.

நான் 2001 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஐசிஐசிஐ புரூடன்ஷியல் லைஃப் இன்ஷுரன்ஸ் நிறுவனத்தில் ஆலோசகராக சேர்ந்து 23 ஆண்டுகள் நிறைவு மற்றும் மியூச்சுவல் ஃபண்ட் விநியோகஸ்தராக 17 ஆண்டுகள் நிறைவு .

Systematic Investment Plan ( SIP ) எனும் மாதாந்திர முதலீட்டுத் திட்டத்தின் மூலம் மாதம் Rs 500 முதல் சாதாரண மக்கள் எளிதாக சேமிப்பு,முதலீடு பழக்கத்தை ஏற்படுத்தி அவர்களுடைய நிதிக் குறிக்கோள்களை அடைய உதவி செய்து வருகிறேன்.

COVID 19 கொரோனா தொற்று ஒரு பெரிய பாடத்தை கற்றுக் கொடுத்தது.

515 ஆண்டுகளாக சிறுகச் சிறுக SIP மூலம் சேர்த்து வைத்த பணத்தை மருத்துவச் செலவுகள் காரணமாக பறி கொடுத்த நிகழ்வுகளை பார்க்க நேர்ந்தது. காரணம் . பெரும்பாலான மக்கள் சரியான அவர்கள் குடும்பத்திற்கு ஏற்ற காப்பீடு ஆயுள்,மருத்துவ (மெடிக்ளைம்) பாலிசிகளை வைத்துக் கொள்ளாமல் போனது தான்.

2047 ஆண்டுக்குள் அனைவருக்கும் காப்பீடு என்ற இலக்கை அடைய இந்தியா முயற்சி எடுத்து வருகிறது.

தனிப்பட்ட சமூக பொறுப்புணர்வு நடவடிக்கையாக

காப்பீடு பற்றிய விழிப்புணர்வு தமிழக மக்களிடையே ஏற்படுத்தும் முயற்சியாக இலவச காணொளி Webinar

SIP( Systematic Investment Plan)+ SWP(Systematic Investment Plan)+ HIP(Health Insurance Plan ) + TIP ( Term Insurance Plan)நடத்த விரும்புகிறேன்.

விருப்பம் உள்ளவர்கள் whatsApp+ 919884495696 தொடர்பு கொண்டு பதிவு செய்து பயன்பெறுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புடன்
உங்கள் அரு(மை)காமை நிதி முனைவர்
Your Neighbourhood Financial Doctor
S RAMALINGAM MFD LUTC FELLOW NJ PARTNER
IRDA certified Senior Advisor Life, Health & PA Insurance.
AMFI certified Mutual Fund Distributor

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201 Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2024-2026 WPP NO: TN / PMG (CCR) /WPP/596/ 2024-2026
Posted on Every Friday & Saturday at Egmore RMS 1 / Patrika Channel. Registered with Press Registrar General of India, Under Regd No: 1222/57

# டங்ஸ்டன் வெட்டியெடுக்க சுரங்கம்: பல்லுயிர் மரபு வளம் அழிக்கப்படுமா?



வ.மணிமாறன்

**அரிட்டாபட்டி சுற்றுப்பகுதியில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க இந்துஸ்தான் ஜிங்க் நிறுவனத்திற்கு ஒன்றிய மோடி அரசு அனுமதி அளித்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு அந்தப் பகுதி மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருப்பதுடன், போராட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர்.**

ஒன்றிய அரசின் கனிமம் மற்றும் சுரங்கத்துறை அமைச்சகம் அண்மையில் வெளியிட்ட அறிவிப்பு, மதுரை மாவட்டம் அரிட்டாபட்டி பகுதி மக்களை பதற வைத்துள்ளது. சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் திருத்தச் சட்டம் 2023 ன் கீழ் நான்கு கட்டங்களாக ஒன்றிய அரசு ஏலம் விட்டுள்ளது. இதன் நான்காவது ஏலத்தில், இந்துஸ்தான் ஜிங்க் நிறுவனம் விருப்ப ஏலதாரராக அறிவிக்கப்பட்டு 'நாயக்கர்பட்டி டங்ஸ்டன் தொகுதி' (Nayakkarpatti Tungsten Block) கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நாயக்கர்பட்டி டங்ஸ்டன் தொகுதி 20.16 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது. அதாவது ஏறத்தாழ 5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், ஆய்வு மேற்கொள்வதற்கும் சுரங்கம் தோண்டி டங்ஸ்டன் கனிமம் எடுப்பதற்கும் இந்துஸ்தான் ஜிங்க் நிறுவனத்திற்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

## நாயக்கர்பட்டி எங்குள்ளது?

மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்தில் அரிட்டாபட்டி மலை அருகேயுள்ள சிற்றூர் நாயக்கர்பட்டி. இங்கு விரல் விட்டு எண்ணக்கூடிய வீடுகளே உள்ளன. இந்த ஊரின் பெயரை வைத்து மிகநுட்பமாக ஏமாற்றும் ஒன்றிய அரசு, "மொத்தப் பரப்பளவான 20.16 சதுர கிலோ மீட்டரில், அரிட்டாபட்டி மற்றும் மீனாட்சிபுரம் கிராமங்களில் உள்ள 1.93 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு மட்டுமே பாதுகாக்கப்பட்ட பல்லுயிர் பாரம்பரிய பகுதி" என்று கூறுகிறது. புண்ணுக்கு எப்படிப் புனுகு பூசினாலும் உண்மையை மறைக்க முடியாது. டங்ஸ்டன் வெட்டி எடுக்கும் பணிகள் நடைமுறைக்கு வந்தால், அரிட்டாபட்டி மலையின் நான்கு திசைகளிலும் உள்ள வரலாற்று சின்னங்கள் அழிக்கப்பட்டுவிடும். மீனாட்சிபுரம், கூலனிப்பட்டி, செட்டியார்பட்டி, அ.வல்லாளப்பட்டி, சண்முகநாதபுரம், நடுவளவு, தெற்கு வளவு, எட்டிமங்கலம் உட்பட முப்பதுக்கும் மேற்பட்ட கிராமங்கள் சுரங்கம் அமைக்கப்படும் பகுதிக்குள் வருகின்றன. இதனால்தான் தான் டங்ஸ்டன் எடுக்க ஏலம் விடப்பட்டிருப்பது அரிட்டாபட்டி மக்களை மட்டுமல்ல, சுற்றுவட்டார மக்களையும் பதற வைத்துள்ளது.



## வேதாந்தா குழுமத்தின் துணை நிறுவனம்

டங்ஸ்டன் வெட்டியெடுக்க ஏலம் எடுத்துள்ள இந்துஸ்தான் ஜிங்க் நிறுவனம், வேதாந்தா குழுமத்தின் துணை நிறுவனமாகும்.

இதே வேதாந்தா குழுமத்தைச் சேர்ந்த ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராகத்தான் தூத்துக்குடியில் தொடர் போராட்டங்கள் நடைபெற்றன. அங்கு நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டில் 13 பேர் கொல்லப்பட்ட பின், 2018 ஆம் ஆண்டு ஸ்டெர்லைட் ஆலையை தமிழ்நாடு அரசு மூடியது. அதே குழுமம்தான் அரிட்டாபட்டியில் கொள்ளையடிக்க முயற்சிக்கிறது.

Hindustan Zinc Limited

## முதல் பல்லுயிர் பாரம்பரிய தலம்

தமிழ்நாட்டின் முதல் பல்லுயிர் பாரம்பரியத் தலமாக, அரிட்டாபட்டி பகுதி 2022 நவம்பரில் அறிவிக்கப்பட்டது. இப்பகுதியில் 2,200 ஆண்டுகள் பழமையான தமிழ்க் கல்வெட்டுகள், சமணர் படுக்கைகள், குடைவரைக் கோயில்கள், தொடர்ச்சியான ஏழு சிறு குன்றுகள், 72 ஏரிகள், 200 இயற்கை நீரூற்றுக் குளங்கள், 3 தடுப்பணைகள் உள்ளன. வெள்ளை வல்லூறு, செம்மார்பு வல்லூறு, பாம்புண்ணிக் கழுகு உட்பட 250 பறவை இனங்களும், அலங்கு, மலைப்பாம்பு, தேவாங்கு போன்ற உயிரினங்களும் வாழ்கின்றன.

விவசாயத்தை இப்பகுதி மக்கள் நம்பியே வாழ்கின்றனர். நெல், கரும்பு, வாழை சாகுபடி முதன்மையானவை. பல்லுயிர் வளமும் வேளாண் செழிப்பும் வரலாற்றுச் சிறப்பும் மிகுந்த அரிட்டாபட்டி பகுதியில் டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பது பேரழிவையே ஏற்படுத்தும்.

இத்தகைய டங்ஸ்டன் சுரங்கத் திட்டத்தை கைவிட வலியுறுத்தி அரிட்டாபட்டி, மீனாட்சிபுரம் உட்பட 20க்கும் மேற்பட்ட சுற்றுவட்டார ஊராட்சிகளில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதனையடுத்து, பகுதி மக்கள், வணிகர்கள், விவசாயிகள் என அனைத்துத் தரப்பினரும் இணைந்து பெருந்திரள் போராட்டத்தில் ஈடுபட்டனர். "கிரானைட் கொள்ளையை தடுத்து நிறுத்தியது போல், டங்ஸ்டன் எடுக்க வரும் வேதாந்தா நிறுவனத்தையும் விரட்டியடிப்போம்" என்று அவர்கள் உறுதியுடன் கூறினர். இந்தப் போராட்டத்திற்கு நேரில் சென்ற அமைச்சர் பி.மூர்த்தி, தமிழ்நாடு அரசு அனுமதிக்காது என உறுதி அளித்தார். டங்ஸ்டன் வெட்டியெடுக்கும் திட்டத்தை ரத்து செய்ய வலியுறுத்தி பிரதமர் நரேந்திர மோடிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். சட்டப்பேரவையும் கூடி தீர்மானம் நிறைவேற்ற உள்ளது.



இன்றைக்கு மண் வளத்தை மட்டுமல்ல, மண்ணுக்குள் இருக்கும் வளத்தையும் கண்டறிந்து எடுப்பதற்கான அறிவியல் தொழில்நுட்பங்கள் வளர்ந்துள்ளன. அவை மனித குலமும் இயற்கை வளமும் மேம்பட்டு செழிப்படைவதற்கு உதவுவதைவிட கார்ப்பரேட் கொள்ளைக்கும் சுரண்டலுக்குமே பயன்பட்டு வருகின்றன.

பல்லுயிர் வளம், வேளாண் செழிப்பு பற்றியெல்லாம் கார்ப்பரேட்டுகளுக்கும் அவற்றுக்கு வெண்சாமரம் வீசும் அரசுகளுக்கும் கவலையில்லை. லாபம், லாபம் லாபம் என்பது மட்டுமே ஒரே குறிக்கோள். இதனால்தான் அரிட்டாபட்டியின் பல்லுயிர் வளத்தையும் மக்களின் வாழ்வாதாரத்தையும் சூறையாட ஒன்றிய அரசும் வேதாந்தா குழுமமும் முயற்சிக்கின்றன. எனவே டங்ஸ்டன் சுரங்கம் அமைத்து சூறையாடுவதற்கு எதிரான போராட்டத்தை முதலாளித்துவ கொள்ளைக்கு எதிரான போராட்டமாக கட்டமைப்போம்.

தொடர்புக்கு: 9500001224

## லகர் ஃபால்கன் பறவை



அரிட்டாபட்டியில் புராதனச் சின்னங்கள் மட்டுமின்றி, அரிய வகை உயிரினங்களும் வசித்து வருகின்றன. அவற்றில் ஒன்று 'லகர் ஃபால்கன்' பறவை. இவற்றை 'லகுடு' என்றும் அழைப்பர். எலி, பாம்பு ஆகியவற்றை வேட்டையாடி உண்ணும். பறக்கும் போதே வேட்டையாடும் திறன் கொண்டவை. மணிக்கு 180 கி.மீ. வேகத்தில் பறக்கக் கூடியவை. கழுகு இனத்தைச் சேர்ந்த லகர் ஃபால்கன், மலை உச்சியில் உள்ள பாறைகளின் இடுக்குகளில்தான் கூடு கட்டும். இந்தப் பறவைகளை மிக அரிதாகவே தற்போது காண முடிகிறது.

## அரிய வகை தனிமம் டங்ஸ்டன்



1781ல் கார்ல் வில்ஹெல்ம் சீல் என்பவர் டங்ஸ்டனை கண்டுபிடித்தார். டங்ஸ்டன் அதிக கொதி நிலையும் (5930குசி) உருகு நிலையும் (3422குசி) கொண்டது. மின்விளக்கு இழைகள், தொலைக்காட்சி குழாய்கள், உராய்வு எஃகு கருவிகள், ஸ்மார்ட் போன்கள், கார் பேட்டரிகள் போன்றவற்றில் பயன்படுத்தப்படுகிறது. டங்ஸ்டன் கார்பைடு உலோக உற்பத்தி, சுரங்கம், ராணுவத் தளவாடங்கள், கதிர்வீச்சு பாதுகாப்பு, பெட்ரோலியத் தொழில்களில் பயன்படுகிறது. இதன் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அமெரிக்காவுக்கு மட்டும் ஆண்டுக்கு 20 ஆயிரம் டன் தேவைப்படுகிறது. இவை பெரும்பாலும் இறக்குமதியே செய்யப்படுகிறது.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,** Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.